ஸ்ரீ முருகன் ... (stamp)

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

# வலம்புரி

# The Valampuri

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 25 | ஞாயிற்றுக்கிழமை (10.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 234

## க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறு வெளியாகியது

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறு பேறுகள் நேற்று வெளியாகின. உயர் தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்த 2 இலட்சத்து 51 ஆயிரத்து 833 பேரில் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 713 பேர் பரீட்சைக்குத் தோற்றினர்.

இவர்களில் 93 ஆயிரத்து 286 பேர் பல்கலைக் கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை 2 ஆயிரத்து 569 மாணவர்கள் 3 பாடங்களிலும் விஷேட சித்தி பெற்றுள்ளனர்.

பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெற்ற மாணவர்களில் 9 ஆயிரத்து 174பேர் மருத்துவ பீடத்திற்கும் 7 ஆயிரத்து 194 பேர் பொறியியல் பீடத்திற்கும் 28 ஆயிரத்து 654 பேர் வர்த்தக பீடத்திற்கும் 48 ஆயிரத்து 260 பேர் கலைப் பீடத்திற்கும் தகைமை பெற்றுள்ளனர். (தி)

## யாழ்.மாவட்ட பேராளர் மாநாடு இன்று பளையில் நடைபெறும்

### சு.ப.தமிழ்ச்செல்வனும் பங்குபற்றுவார்

(யாழ்ப்பாணம்)

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்.மாவட்ட பேராளர் மாநாடு இன்று முற்பகல் 10.30மணிக்கு பளை மத்திய கல்லூரி மைதானத் தில் விஷேடமாக அமைக்கப்பட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தேவைகள், பிரச் சினைகள் குறித்து ஆராயப்படும் இப் பேராளர் மாநாட்டில், விடுத லைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும புலிகளின் துறைசார் பொறுப் பாளர்கள் கலந்து கொண்டு கருத் துரை வழங்கவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள கிரா மிய, பிரதேச கோட்ட மற்றும் மாவட்ட மட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டு தமது பிரதேசத் தேவைகள் பிரச்சினை கள் சம்பந்தமான தீர்மானங்களை முன் வைப்பர்.


மக்கள் அமைப்பாக இருக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

## குரங்குப்பாஞ்சான் முகாம் சர்ச்சை

# தூதுவர் எரிக்சோல்

# இலங்கை வருகிறார்!



(கொழும்பு)

**ஸ்தம்பித்துப் போயிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தை மற்றும் சர்ச்சைக்குள்ளா கியிருக்கும் விடுதலைப் புலிகளின் திருகோண மலை குரங்குப்பாஞ்சான் முகாம், தொடர்பான இழுபறிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சோல் ஹெய்ம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.**

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான சமாதான முயற்சிக ளுக்கு அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வே அரசு இலங் கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளுக்கான தடையை நீக்கும் வகையில், சிறப்புத் தூது வர் எரிச்சோல் ஹெய்ம்மை இலங் கைக்கு அனுப்புகிறது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கை வரும் இவர் ஸ்தம்பித்து போயிருக்கும் அரசுக்கும் புலிகளுக் குமிடையிலான சமாதானப் பேச்சுக் களை ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகளில் ஈடுபடுவார்.

அத்துடன் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ள விடுதலைப் புலி களின் குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான பிரச்சனைக்கு விடுத லைப் புலிகளுடனும், அரசாங்கத் துடனும், கண்காணிப்புக் குழுவின ருடனும்பேசி, ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்துவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகள் குரங்குப்பாஞ்சனில் உள்ள தமது முகாமை அகற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆனால் புரிந்துணர்வு உடன்

(10ம் பக்கம் பார்க்க)

## குரங்குப்பாஞ்சான்முகாம்

### அமெரிக்கா அதிருப்தி விடுதலைப் புலிகள் கவலை

(கிளிநொச்சி)

திருகோணமலை மாவட்ட குரங்கு பாஞ்சான் முகாம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையை அடிப் படையாகக் கொண்டு அமெரிக்கா வெளியிட்டுள்ள அதிருப்தி குறித்து விடுதலைப் புலிகள் கவலை தெரி வித்துள்ளனர்.

குரங்குபாஞ்சான் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைந்துள்ளது எனவும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம்

(10ம் பக்கம் பார்க்க)

## புலனாய்வு உதவியாளர் நேற்று சுட்டுக் கொலை

### அக்கரைப்பற்றில் சம்பவம்

(மட்டக்களப்பு)

அம்பாறை அக்கரைப்பற்றில் நேற்று மாலை இராணுவப் புல னாய்வு உதவியாளர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த சம்பு நாதபிள்ளை விவேகானந்தராசா (வயது36) என்பவரே சுட்டுக் கொல் லப்பட்டவராவார்.

பிரஸ்தாப நபர் ஆரம்பத்தில் ரெலோ உறுப்பினராகவும்,பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியிலும இணைந்து செயற்பட்டுவந்தார்.

அண்மைக்காலமாக ராசிக் குழு வினருடனும் படையினருடனும் இணைந்து செயற்பட்டு வந்துள் ளார்.

சில மாதங்களாக கொழும்பில் தங்கியிருந்த இவர் இரண்டு தினங் களுக்கு முன்னர் தனது சொந்த ஊரான அக்கரைப்பற்றுக்கு திரும்பி யிருந்தார்.

நேற்று மாலை சைக்கிளில் கடைக்குச் சென்ற வேளை, மோட் டார் சைக்கிளில் வந்த இனந்தெரி யாத நபர்கள் பிரஸ்தாப நபரை சுட்டு விட்டு தப்பிச் சென்றனர். பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (த-14)

## அமைச்சர் மிலிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டிருந்த பொருளாதார மறு சீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொற கொட நேற்று நாடு திரும்பினார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற் கொண்டிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் ஆகியோரைச் சந்தித்து பேசியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (த)

## மூத்த பத்திரிகையாளர் சிவகுருநாதன் காலமானார்

(கொழும்பு)

மூத்த பத்திரிகையாளரும், சட் டத்தரணியுமாகிய கலாசூரி ஆர்.சிவ குருநாதன் நேற்று அதிகாலை கொழும்பில் காலமானார்.அவருக்கு வயது 71.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகிய இவர் தினகரன் பத் திரிகையில் 34 வருடங்கள் பிரதம

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் சட்ட நிபுணர்கள்கூடி திட்ட வரைபை ஆராய்வர்

(கிளிநொச்சி)

இடைக்கால நிர்வாகக் கட்ட மைப்புத் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முன் வைத்த திட்ட வரைபு குறித்து விடு தலைப் புலிகளின் சட்ட நிபுணர்கள் குழு இருவாரங்களுக்குள் ஐரோப் பிய நாடொன்றில் கூடி ஆராயவுள் ளதாக புலிகள் தரப்பில் இருந்து கிடைக்கப் பெறும் தகவல்கள் கூறு கின்றன.

அரசாங்கம் சமர்ப்பித்த திட்ட வரைபினை ஆராய்ந்து வரும் விடு தலைப் புலிகளின் சட்ட நிபுணர் குழு உலகின் ஏனைய பாகங்களி லும் பரந்துள்ள தமிழ்ச் சட்ட வல் லுநர்களையும் துறைசார் நிபுணர் களையும் அழைத்து இத்திட்ட வரைபின் அடுத்த கட்டம் குறித்து

(10ம் பக்கம் பார்க்க)

## உள்துறை அமைச்சர் இன்று யாழ்.வருகிறார்

(கொழும்பு)

உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமர துங்கா இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் அமைச்சர் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகத்தை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பில் யாழ்.குடாநாட் டில் யுத்தத்தினால் அழிந்து போயு ள்ள கிறிஸ்தவ தேவாலயங்களை மீளக் கட்டியெழுப்புவது குறித்தும் அதன் பொருட்டு மேற் கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள் குறி த்தும் ஆயருடன் அமைச்சர் விரி வாக ஆராய்வார்.

அத்துடன் யாழ்.செயலகத்தில் யார்ழ்.அரச அதிபரைச் சந்தித்து

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மானமிக்க வீரமண்ணில் அமைச்சர் ஜோன் அமரதுங்காவுக்கு மேடையிடுவது நியாயமானதா?

## ஈழத்தமிழின மறவர் மன்றம் யாழ்.ஆயரிடம் கேள்வி

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்காவின் வருகையை எதிர்த்தும், அவரை வரவேற்பதைக் கண்டித்தும் 'ஈழத்தமிழின மறவர் மன்றம்' என்ற ஓர் புதிய அமைப்பு துண்டுப்பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

அமைச்சரை வரவேற்பது ஏன்? என்ற தலையங்கத்தில் வெளியிடப்பட்டுள்ள இத் துண்டுப் பிரசுரம் நேற்றிரவு 9மணியளவில் வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு;

சிங்களப்பேரினவாத சிந்தனை கொண்ட அமைச்சர் ஜோன் அமரதுங்காவை வரவேற்பதில் ஆயர் முன்னிற்பது அழிவுகளைச சந்தித்து, இன்றும் இராணுவ முற்றுகைக்குள் இருந்து அமுந்திக் குமுறும் எமக்கு பெரும் வேதனையை அளிக்கிறது.

எமது இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அரச படைகளின் பயங்கரவாத தாக்குதல்களில் முன்னின்ற அரசுகளில் எல்லாம் காத்திரமான பங்குவகித்த ஜோன் அமரதுங்க யாழ்.வருவதன் உள்நோக்கம் என்ன? வேறொன்றுமல்ல; அரசியல் வியாபாரம்தான். இதற்கு இடமளிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவது ஆயரிற்கழகல்ல.

மேலும், எந்த அரசு எந்தத் தேவாலயத்தின் மீது வெறியாட்டமாடி நரபலி எடுத்ததோ அதே அரச பிரதிநிதி, அதே தேவாலயத்தில் வழிபாடா? உள்ளம் வேகுகிறது. இதற்கு ஆயர் ஏற்பாடுகள் செய்வது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. அமைச்சர் கிறிஸ்தவ மதத்தவராகவோ, கிறிஸ்தவ விவகார அமைச்சராகவோ இருக்கிறார் என்ற காரணம் ஏற்புடையதல்ல.

அமைச்சரின் வருகைக்கு மதச் சாயம் பூசப்படுவது வருந்தத்தக்கது. இவ்வாறான பேரினவாதியின் வருகையை மொத்தத் தமிழ்ச் சமூகமும் வெறுக்கிறது. இவ்வாறான பேரினவாதிகளின் அரசியல் சுயலாபப் பயணங்களை ஆயரின் கட்டுக்கோப்புக்குள் இருக்கும் கிறிஸ்தவ மக்கள் வெறுக்கிறார்கள். ஆனால் ஆயர் முன்னின்று வரவேற்பது ஏன்?

இராணுவ கெடுபிடிகளுக்குள் மக்களை அழுத்தும் புரிந்துணர்வு உடன்பாட்டினைச் சரியாக நடைமுறைப்படுத்தாத அரசினது அமைச்சர்களினது வருகையை மக்கள் எதிர்ப்பது நியாயமே. ஏனெனில் அவர்களுக்கான இயல்வு வாழ்க்கைகளை பெற்றுத் தரமுடியாத- தமிழ் மக்களை உரிமைகளோடு வாழவிடுவதை ஊக்குவிக்க முடியாத அமைச்சர்களின் வருகையால் என்ன இலாபம்? அவர்களை வரவேற்பதால் என்ன பயன்?

புனர்வாழ்வு அமைச்சருக்கு ஏற்பட்ட அவமானம், ஏனைய அரசியல் சக்திகளின் போலி வேடக் கூத்துக்களின் கேவலம் எல்லாம் உலகறிந்திருக்க ஆயர் அறியாதது போல் அரசியல்வாதிக்கு, இல்லை இல்லை- ஒருபேரினவாதிக்கு, உயிர் விலை கொடுத்த ஒருமானமிக்க வீரமண்ணில் மேடையிடுவது வேதனைக்கும் கண்டனத்திற்கும் உரிய விடயமே. (ந)

# கண்ணீர் அஞ்சலி

எமது சபையில் கடமையாற்றும்

திரு.ஞா.யோகராசா அவர்களின் தந்தை

**அமரர் வேலன் ஞானப்பிரகாசம்**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.

(7424)

## வீரமுரசு வார அரங்கு

(யாழ்ப்பாணம்)

பிரதேச ரீதியாக நடாத்தப்பட்டு வருகின்ற வீரமுரசு வார அரங்கு இன்று எழுவை தீவு ஸ்ரீ முருகன் ஆலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

(உ )

## கலந்துரையாடல்

(உடுவில்)

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தால் ஆங்கில தேசிய டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களில் இது வரை அரச சேவையில் நிரந்தர நியமனம் கிடைக்காதவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30க்கு யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் இடம் பெறவுள்ளது.

சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது இதில் கலந்து கொள்ளுமாறு டிப்ளோமா மாணவர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.

(உ-261)

## பேருந்து சேவை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி, வட்டுக்கோட்டை மற்றும் சித்தன்கேணி ஊடாக சங்கானையைச் சென்றடையும். இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 789 இலக்க பேருந்து சேவை கடந்த 3-ம் திகதியில் இருந்து இரவு 8மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

(உ-18)

## திருட்டுநபர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்

(சுண்டுக்குளி)

நள்ளிரவு நேரம் வீட்டினுள் புகுந்த திருடன் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

கடந்த வெள்ளியன்று இரவு சுண்டுக்குளி குருசோ வீதியிலுள்ள முன்னாள் கடற்படை வீரர் ஒருவரின் வீட்டில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதேவேளை, மறுநாள் அதிகாலை அவ்வீட்டுக்கு அண்மையில் உள்ள ஓர் ஒழுங்கையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி ஒன்றும் அப்பகுதி மக்களால் கைப்பற்றப்பட்டு ஜே/77 கிராம அலுவலரான விஜயரட்ணத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

(உ-110)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெற்று வரும் தெய்வீக இசையரங்கு 8-ம் திருவிழாவான இன்று கிருபாசக்தி கருணாவின் பாட்டுக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

❋❋❋❋

(யாழ்ப்பாணம்)

நல்லைக் கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வ பிரதேச இந்துப் பேரவை ஏற்பாட்டில் ஆலய தேரடியில் அமைந்துள்ள 63 நாயன்மார் குருபூசை மடத்தில் இடம் பெற்று வரும் தெய்வீக நிகழ்ச்சித் தொடரில் இன்று மாலை வைணவ சமய வாழ்வு எனும் பொருளில் விகடகவி புலவர் மு.திருநாவுக்கரசு சொற்பொழிவாற்றவுள்ளார்.(உ-18)

## கொடியேற்றம்

(கந்தரோடை)

அளவெட்டி மேற்கு ஸ்ரீ நாக வரத நாராயணர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழா இடம் பெறவுள்ளது.(உ-103)

## இன்று தேர்

தென்புலோலியூர் தான்தோன்றி உபயகதிர்காம ஆலய வருடாந்த உற்சவத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும்.நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

(உ-52)

❋❋❋

அளவெட்டி தெற்கு ஸ்ரீமுத்து மாரியம்மன் ஆலயத் தேர் உற்சவம் இன்று இடம் பெறவுள்ளது. தீர்த்த, பூங்காவன உற்சவங்கள் முறையே நாளையும் நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளது.

(உ-103)

❋❋❋

மீசாலை தெற்கு பன்றிக்கேணி கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா இன்று பக்தி பூர்வமாக இடம் பெறவுள்ளது.

தீர்த்தம் மற்றும் பூங்காவன உற்சவங்கள் முறையே நாளையும், நாளை மறுதினமும் இடம் பெறவுள்ளன.

(உ)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

* 'இராமா' வாஜ்பாயைக் காப்பாற்று.
* மிதிவெடிதந்த அபாயம்.
* பண்டா-ஜே.ஆர். காட்டிய பாதையில் விமல் வீரவன்ச
* இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கை வருவது ஏன்?
* ஆலடி மாநாடு.
* வியாசரின் பதில்கள்.
* செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது


விலை ரூபா 14.00

சங்குநாதம்


# அளவெட்டி வெளிவயல் முத்துமாரி அம்மன்

# ஆலய தேர்ச் சிறப்பு மலர்

## 10-08-2003







### வாழ்த்துச் செய்தி



இரதோற்சவம் மற்றைய உற்சவங்களை விட மிகவும் சிறப்பானதாய் திகழ்கின்றது. பொதுவாகவே மஹோற்சவம் மக்கள் மனதில் பக்தியை ஏற்படுத்துவதாகவும், மற்றைய நாட்களில் தேவஸ்தானத்தில் ஏற்படும் குறைகளைக் களைவதாகவும் உள்ளது. இவ்விதத்தில் அகில உலகங்களையும் ஈன்று காக்கும் அன்னை சீர் இலங்கை வடதிசையில் அளவையூர் வெளிவயல் பதிமேவி ஆட்சி செய்யும் ஸ்ரீ முத்துமாரி அம்பிகையின் சித்திரத் தேர் பவனி இன்று (10.08.2003) பவனி வருவதை முன்னிட்டு போற்றி மகிழ்வதோடு இந்நாட்டின் மக்கள் அனைவருக்கும் சகல நலன்களும் கிடைக்க வாழ்த்துவதோடு அன்னையின் அருளால் நிரந்தர சாந்தி, சமாதானம் ஏற்பட்டு நாடும் மக்களும் செழிப்புடன் வாழ வாழ்த்துகிறேன்.

சுபம்.

*உற்சவ சிவாச்சாரியார் சோ.உமா ரமணக் குருக்கள்*
*ஆலய பிரதம சிவாச்சாரியார் செ.சுகுமாரசர்மா*

### வந்து சேர்மின்



சீர்பெருகும் தென்னளவைப் பதியின்கண்ணே
திருத்தொண்டர் பால்குடித்த மாரி என்று
பேர்பெருகும் அடியார்கள் வணங்கிவாழும்
பெருமாட்டி ஆடிப்பூ ரணையில் தீர்த்தம்
ஊர்பெருகும் வகை நல்க ஓங்காரத்தின்
ஒளிவீசும் தங்கரத மேறுகின்றார்
பார்பெருகும் பக்திமக்காள். வந்து சேர்மின்
பவம் தீர்க்கும் முத்துமாரி கருணை கொண்மின்

வருகின்ற அடியாரின் வறுமை போக்கி
மாறாத பெரு நோய்கள் பலவும் நீக்கி
உருகுவார் உள்ளத்தில் கோயில் கொள்வாள்
ஓங்குவளம் செழிக்க வெளிவயலின் பாங்கா
கருணைமுகக் காந்திதரும் முத்துமாரிக்
கற்பகத்தைத் தேரிற்கண் டின்பங் கொள்வார்
பெருகிநிற்கும் பவமொழிப்பார் பிரணவத்தின்
பேரின்பத் தவப் பயனைப் பெற்று வாழ்வார்

சுபம்.

அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A

## ஆலய வரலாறு

இவ் ஆலயத்தின் பு.ர்வ வரலாறு மிகவும் அற்புதம் வாய்ந்தது. மாகியம்பிட்டி சண்டிலிப்பாய் அங்கணம்மைக் கடவை என்னும் மேட்டு நிலத்தில் ஆலமர நிழலின் கீழ் பெண்கூட்டம் ஒன்று இளைப்பாற வந்தது. தமது தாகத்தைத் தணிப்பதற்காக வயலில் வேலை செய்துகொண்டிருந்த மக்களை அழைத்து இளநீர் கேட்டனர். அவர்களும் தேடிப் பறித்து 3 இளநீர் தந்தனர். இவர்களில் இருந்தவர்களோ நால்வர். ஆகவே இன்னும் ஒரு இளநீர் வேண்டுமே என்று கமக்காரர்கள் கவலை கொண்டனர்.

அப்போது அவர்களில் இருந்த ஒரு நரைத் தலைக் கிழவியார் கவலை வேண்டாம் மக்களே! நான் அங்கே மாடுகள் நிற்கும் இடம் சென்று பால் வாங்கிக் குடிப்பேன் என்று கூறி வடக்கே சென்றாள். அங்கு ஒரு மர நிழலில் அமர்ந்து இடையன் ஒருவனை அழைத்து ''மகனே உனது மாட்டிலிருந்து சிறிது பால் எடுத்துத் தரமாட்டாயா? தாகம் தீரக் குடிக்க வேண்டும்'' என்றாள். இடையனோ ''அம்மா இங்கு பத்து வருடமாக மழை இல்லை. குளங்களில் நீரில்லை. பயிர் வளரவில்லை. அதனால் பசுக்கள் தமது கன்றுகளுக்குக் கூட பால் கொடுக்க முடியாது நலிந்து போயிருக்கின்றன. இந்த நிலையில் உங்களுக்கு எங்கிருந்து பால் தருவது'' என்று கவலைப்பட்டான்.

நரைக்கிழவி மிகமிக மெலிந்த பசுவொன்றை குறிப்பிட்டுப்பார்த்தாள். உடனே அந்தப் பசு கொழுத்த மேனியும் பால் ததும்பும் முலைக்காம்பும் கண்கவரும் முகப் பொலிவும் கொண்டு கிழவியிடம் வந்து உரிமை கொண்டாடியது. மடியைத் தொட்டாள் கிழவி. பாலாறு பெருகியது. வயிறாரக் குடித்தாள். இடையனும் குடித்தான். உள்ளம் புரித்தான். வந்தவள் மானிடப் பெண்ணல்ல. அகிலாண்டேஸ்வரியே என ஆனந்தக் கூத்தாடினான். கிழவியைக் காணவில்லை. ''ஆச்சி ஆச்சி எங்கு போய்விட்டாய்'' எனக் கூச்சலிட்டான். திடீரெனக் காட்சி தந்தாள் எம்பெருமாட்டி. ''மகனே! என்பெயர் முத்துமாரி என் சகோதரிகளுடனே வந்தேன். அவர்கள் அங்கணம்மைக் கடவையில் தங்கி விட்டார்கள். அவர்கள் மீனாட்சி, நாகேஸ்வரி, கண்ணகி என்பவர்கள். யாம் திருவிளையாடலின் பொருட்டு இவ்விடம் வந்தோம். இனி மாதம் மும்மாரி பெய்து நில வளம் செழிக்கும். நீயும் ஊராரும் என்னை ஆதரித்தால் உங்கள் மனக்குறைகள் எல்லாம் தீரும்'' என்று கூறி மறைந்தாள். அத்தொண்டன் அங்கு நின்ற வேம்பின் கீழ் ஸ்ரீமுத்து மாரியை நினைத்துப் பு.சித்து வந்தான். அவ்விடம் காலகதியில் சிறு கோயிலாகியது.

இங்கு ஸ்ரீ காஞ்சிபுரத்திலிருந்து அம்பிகையின் சிலையைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தார்கள். சுமார் 250 வருடங்களுக்கு மேற்பட்ட கால எல்லையையுடைய இவ் ஆலயத்திற்கு முதற் கும்பாபிஷேகம் எப்போது நடந்ததென்பது தெரியாது. பலியிடுதல். பு.சை பொங்கல். 8 நாள் விழாக்கள் இவை ஆனி மாதத்தில் நிகழ்ந்து வந்தன.

இவ் ஆலய தர்மகர்த்தாவாக விளங்கும் சி.சண்முகநாதன் 1967 ஆம் ஆண்டு பலி நிறுத்த ஏற்பாடு செய்து திருவு.ஞ்சலும். ஊர்வலமும் மேற்கொண்டார். அருட்செல்வி முத்துக்குமாரிக்கு புதுக்கோயில் கட்டப்பட்டு 31.08.1984ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பரிவார மூர்த்திகளாக ஸ்ரீ கணேசர், ஸ்ரீ முருகன், ஸ்ரீவைரவர் ஆகியோர் உள்ளனர். இரண்டாவது கும்பாபிஷேகம் கடந்த 2001 ஆம் ஆண்டு நாலாம் திகதி வைகாசி மாதம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.


| | | | | |
|---|---|---|---|---|
| ஆனந்தன் சைக்கிள் வேக்ஸ்<br>ஸ்ரேசன் வீதி,<br>சுன்னாகம். | சந்திரன் ஸ்ரோர்ஸ்<br>மானிப்பாய் வீதி,<br>மருதனார்மடம். | விக்கினேஸ்வரா ரயர் வேக்ஸ்<br>பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,<br>கே.கே.எஸ் வீதி,<br>சுன்னாகம். | சுப்பிரமணியம் சைக்கிள் வேக்ஸ்<br>அளவெட்டி மேற்கு,<br>அளவெட்டி. | திலஷ்சன் ஸ்ரோர்ஸ்<br>அளவெட்டிதெற்கு,<br>அளவெட்டி. |
| பொபி ஸ்ரோர்ஸ்<br>மாகியம்பதி,<br>சண்டிலிப்பாய். | குஞ்சன் பல்பொருள் வாணிபம்<br>அளவெட்டிதெற்கு,<br>அளவெட்டி. | செல்வன் ரயர் வேக்ஸ்<br>கே.கே.எஸ்.வீதி,<br>சுன்னாகம். | மதுப்பிரியா தையல் அகம்<br>அளவெட்டிதெற்கு,<br>அளவெட்டி. | அம்பாள் ஸ்ரோர்ஸ்<br>385,கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம். |
| கஜமுகன் தொலைத்தொடர்பு நிலையம்<br>அளவெட்டிதெற்கு. | கதிர்காமசிங்கம் சன் பல் பொருள் வாணிபம்<br>அளவெட்டிதெற்கு,<br>அளவெட்டி. | கே.கே.முகுந்தன் சைக்கிள் வேக்ஸ்<br>மலைவேம்படி,<br>அளவெட்டி. | சுதேச வைத்தியர் Delft ஆறுமுகம்<br>வைத்தியநிலையம்,<br>அளவெட்டி. | உதயா ஸ்ரோர்ஸ்<br>அளவெட்டிமேற்கு,<br>அளவெட்டி. |

## இன்னும் ஒரு தகவல்

# நுளம்புத் தொல்லை

பனாமா கால்வாயை கட்டும்போது அதற்கு ஒரு பெரிய தடையாக இருந்தது எது தெரியுமா? ஏதாவது பொறியியல் சம்பந்தப்பட்ட சிக்கல் என்று நினைக்கின்றீர்களா? அது தான் இல்லை.நுளம்புகள் ஏற்படுத்திய பிரச்சினை தான் பெரிய பிரச்சினையாக இருந்தது. அங்கு சுற்றியிருந்த காடுகளில் நுளம்புகள் அதிகமாக இருந்தன. இவை கால்வாய் கட்டுபவர்களைக் கடிக்கத் தொடங்கி விட்டது. இதனால் அங்கு வேலை செய்தவர்கள் கொஞ்ச நாள் கூடத் தொடர்ந்து நோய் நொடி இல்லாமல் வேலை செய்ய முடியவில்லை. பெரிய சிரமமாகி விட்டது.

அவர்கள் யோசித்தார்கள! கால்வாய் கட்டுவது இருக்கட்டும் முதலில் இந்தக் கொசுக்களை விரட்ட என்ன வழி என்று பார்த்தார்கள். முதலில் கொசுக்களை விரட்டி விட்டு அதன் பின்பு தான் கால்வாயைக்கட்டி முடித்தனர்.

கொசுக்கடிக்கு ஆளாவது மனிதன் மட்டும் தான் என்றில்லை. விலங்குகளும் இதிலிருந்து தப்பிக்க முடியாது. பன்றி,நாய்க்குட்டி போன்றவற்றிற்கெல்லாம் இரத்தச்சோகை நோயே வந்து விடும். பாற்பண்ணைகளில் உள்ள கறவை மாடுகளைக் கடித்து துன்பப்படுத்துவதால் பல பிரச்சினைகள். பன்றிகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் மூளைக்காய்ச்சல், செம்மறி ஆடுகளில் காணப்படும் நீல நாக்கு நோய் இவையெல்லாம் பரவுவதற்கு காரணமாக இருப்பவை "குயு,லி காய்ட்ஸ்" எனும் வகை நுளம்புதான்.

இவற்றிலிருந்து தப்பிப்பதற்கு பண்ணை உரிமையாளர்கள் தமது பண்ணையில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தண்ணீர் தேங்கியிருக்கும் இடத்தில் மண்ணெண்ணெயில் 5 சதவீத அளவிற்கு D.D.T. கலந்து தெளிக்க வேண்டும். பண்ணையில் உள்ள நுளம்புகளை விரட்ட புகை மூட்டம் போடலாம். காய்ந்த இலைகளை முக்கியமாக வேப்பம் இலைகளை இதற்குப் பயன்படுத்தலாம். வேப்பம் பிண்ணாக்கு கரித்தூளுடன் கலந்தும் புகை போடலாம்.

வேப்பம் பிண்ணாக்கு,வேப்பம் இலை இவற்றிற்கு நச்சுயிரை அழிக்கும் சக்தி உண்டு. கார்த்திகை மாதத்தில் "சொக்கப் பனை" எரிப்பது எதற்காக? அது ஒரு விதமான புகை மூட்டம். கார்த்திகையில் நுளம்புத்தொல்லை அதிகமாக இருக்கும். பனை எரித்த பின் குறைய ஆரம்பித்து விடும்.

மலேரியாவை முற்றாக அழித்து விட எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தனர்.முடியவில்லை. தற்போது கூட நவீனமாக சிலவற்றை கண்டு பிடித்துள்ளனர். கொசு விரட்டும் சோப் Mosquito Repellant Soap. மேற்கு பசுபிக் நாடுகளில் இதனை உபயோகப்படுத்துகின்றனர். உலக சுகாதார நிறுவனம் (WHO) அதன் மண்டல அலுவலகம் மணிலாவில் உள்ளது. அங்கு கூட இந்தச் சோப்பைப்பற்றி பரிசோதனைகள் செய்து பார்த்தார்கள். இந்த சோப்பை நமது உடலில் பூசி கழுவாமல் அப்படியே காயவைக்க வேண்டும். அதன் பின் 6 லிருந்து 12 மணி நேரம் நுளம்புக்கடியைப் பற்றி நாம் கவலையே படவேண்டியதில்லை. நுளம்புகள் தான் கவலைப் படவேண்டும். ஏனென்றால் அந்த நேரத்தில் நம்மைக் கடித்தால் அவை இறந்து விடும்.

ஒவ்வொரு வருடமும் மலேரியாவினால் 300 மில்லியன் மக்கள் இறந்து போகின்றனர்.வருடத்திற்கு ஒரு மில்லியன் ஆபிரிக்கக் குழந்தைகளின் உயிருக்கு இதனால் ஆபத்து என்று குறிப்பு உண்டு. அதனால் இதனை நாம் அலட்சியமாக விடக்கூடாது.

புதிய புதிய நல்ல கண்டுபிடிப்புக்கள் தற்போது வந்துள்ளன. இன்னொரு முக்கியமான கண்டுபிடிப்புக்காக நாம் காத்துக் கொண்டிருக்கின்றோம். அதாவது மலேரியா தடுப்பு ஊசி மருந்து Vaccine. இது தற்போது பரிசோதனை நிலையில் இருக்கின்றது.

நுளம்புகளுக்கு குடும்ப நலத்திட்டத்தை சிபாரிசு செய்யும் யோசனையும் உள்ளது. ஏற்கனவே குடும்பஸ்தர்களுக்கு ஏகப்பட்ட தொல்லை. அதில் நுளம்புத்தொல்லை வேறு.

எமது சபாவில் நீங்கள் வந்து கச்சேரி செய்யவேண்டும் என ஒருவரை அழைத்தனர். "மக்கள் கை தட்டும் ஓசை அடிக்கடி கேட்கவேண்டும். அப்போது தான் எனக்குப் பாடும் மன நிலை வரும்" என்றார் இவர். அதற்கு வந்தவர் கூறுகின்றார் "அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். ஏனென்றால் எமது சபாவில் நுளம்புத்தொல்லை அதிகம்" இது எப்படி இருக்கின்றது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பொலிஸ்மா அதிபர் சகிதம் இன்று உள்துறை அமைச்சர் யாழ். வருகிறார்

(கொழும்பு)

உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்கவுடன் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா, உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைப், ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் டெபாறியா,பிரதமரின் ஆலோசகர் ஆகியோரும் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாக உள்துறை அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும இவர்கள், யாழ். நூல் நிலையம், நல்லூர் ஆலயம்,சென் ஜேம்ஸ் தேவாலயம், மற்றும் யாழ். சிறைச்சாலை, பொலிஸ் நிலையம் ஆகியவற்றிற்கும் சென்று அங்குள்ள நிலைமைகள் பற்றி விரிவாக ஆராயவுள்ளனர்.

இதேவேளை,காணிஅமைச்சர் ராஜித சேனாரத்னா நாளைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தேர்தல் திருத்தச் சட்டமூலம் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

## தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

இவ்வருட இறுதிக்குள் தேர்தல் முறைமைகளை மாற்றுதற்கான திருத்தச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு ஆலோசித்து இருப்பதாக தேர்தல் திருத்தசட்ட மூலத்துக்கான பாராளுமன்ற ஆலோசனைக் குழுவின் தலைவர் தினேஷ்குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இவ்விடயம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வசிக்கும் கட்சிகளிடமும், உறுப்பினர்களிடமும் கருத்துக்கள் பெறப்படவுள்ளது.

எனினும் இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு ஏதுவாக மேற்படி ஆலோசனைக் குழுவிற்கான உறுப்பினர்களை தெரிவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அடுத்த சில தினங்களில் சபாநாயகர் கட்சித்தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பிரதேச சபை, நகர சபை ,மாகாண சபை உட்பட பாராளுமன்ற தெரிவுகளுடன் தொடர்புடைய திருத்தங்களைச் செய்வதற்கான கடமை பாராளுமன்ற ஆலோசனைக் குழுவையே சார்ந்தது.

தற்போதைய தேர்தல் முறை தொடர்பாக அரசியல் கட்சிகள், ஆளும் கட்சிகள், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# டோக்கியோவில் கிடைத்த நிதியை அர்த்தமுள்ள வகையில் அரசு செலவிடும்

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கிடைத்த நிதியுதவியினை அரசாங்கம் அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமான கண்காட்சி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய பீரிஸ், இதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனை யுடன் விசேடதிட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கொள்கைத் திட்டமிடல் அமைச்சுக்கும் ஏணைய அமைச்சுக்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு மேலும் வலுப்படும்.

கைத்தொழில் துறைகள் அபிவிருத்திக்காக 17 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## இராசி பலன்

**10.08. 2003**
**(ஆடி 25, ஞாயிறு)**

திரயோதசி - பி.ப. 1.15 வரை
பூ,ராடம் - மு.ப. 09.09 வரை
இராகுகாலம் - 04.34-06.04
சுபநேரம் - 09.04-10.34

சித்தாமிர்தம்

**மேடம்**
கட்டுப்படுதல், எதிர்பாராத செலவு, காரியதாமதம், தெய்வ சிந்தை.

**இடபம்**
போசன சுகம், வீண் கலகம், வாகன பயம், பொருள் விரயம்.

**மிதுனம்**
காரிய சித்தி, கீர்த்தி, தெய்வ சிந்தை, போசன சுகம்,

**கடகம்**
சந்தோசமான சம்பவம், நண்பர்கள் சந்திப்பு, காரிய சித்தி, புதிய முயற்சி.

**சிங்கம்**
சோகம், எதிலும் தடை தாமதம், உடல் நலக்குறைவு, தனவிரயம்.

**கன்னி**
புதிய விடயம், தன்னம்பிக்கைக் குறைவு, உடல் நலக்குறைவு, முயற்சி தாமதம்.

**துலாம்**
முயற்சி கைகூடும், தன வரவு, நண்பர்கள் சந்திப்பு ,தெய்வ சிந்தை.

**விருச்சிகம்**
அதிக செலவு, கௌரவக் குறைவு, இடமாற்றம், காரிய தாமதம்.

**தனுசு**
வெகுமானம், நல்ல காரியம், போசன நன்மை, தனவரவு.

**மகரம்**
காரிய அலைச்சல், தன விரயம், சயனசுகக்குறைவு, பிரயாணம்.

**கும்பம்**
குடும்ப சுகம், முயற்சி கைகூடும், தனலாபம், நண்பர்கள் சந்திப்பு.

**மீனம்**
அதிகாரம், காரிய நன்மை, பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில் விருத்தி.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீதான தாக்குதலுக்கு வன்மையான கண்டனம்

(கிளிநொச்சி)

போரினால் பாதிப்படைந்த மக்களுக்கு மனிதாபிமான உதவிச் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிறுவனங்களில் ஒன்றான தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

மட்டக்களப்பில் படையினரின் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது கடந்த புதன்கிழமை இரவு இனந்தெரியாத நபர்கள் சிலர் கைக்குண்டு வீசித் தாக்கியுள்ளனர்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13ஆம் திகதியும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது இது போன்றதொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத்தகைய அடாவடித்தனமான செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்மீது கடந்த புதன்கிழமை நடததப்பட்ட தாக்குதல் சம்பவத்தை சிலர் அலட்சியம் செய்து திசை திருப்பப் பார்க்கின்றார்கள். இது நியாயமற்ற செயல். எனவே, இச் சம்பவம் குறித்து நீதியான முறையில் விசாரணைகளை நடாத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன்,மீண்டும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறாத வகையில் அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுள்ளது. (உ-10)

## ரயில்வே அதிகார சபை குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யக் கோரிக்கை

(கொழும்பு)

ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றுவதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச் செய்யுமாறு ரயில்வே மேற்பார்வை முகாமையாளர் தொழிற்சங்கங்களின் சம்மேளனம் அரசைக் கோரியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் மேற்படி சம்மேளனத்தின் தலைவர் இது குறித்து அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

இந்த வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் உடனடியாக இரத்துச் செயயாவிட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த மாதம் 23ஆம்திகதி முதல் ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக அரசாங்கம் மாற்ற நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கு முதல் பல எதிர்ப்புக்கள் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

## சுகாதார சேவைத் திணைக்களம் மதங்களுக்கிடையே பாரபட்சம்

(சுதுமலை)

இலங்கையில் உள்ள சகல அரசாங்க வைத்தியசாலைகள் ,கிராமிய வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்களின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு வருகை தரும் பௌத்த மத குருமாருக்கு முன்னுரிமைப்படுத்தி சிகிச்சை வழங்குமாறு ,சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சகல தர வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளையும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும்,வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் பௌத்தமதகுருமாருக்கு விசேடமாக விடுதிகளில் மறைப்பு அமைக்கப்பட்டு சிகிச்சை வழங்குமாறும் வைத்திய அதிகாரிகளை கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் இந்துமதகுருமார், கிறிஸ்தவ மதகுருமாரை முன்னுரிமைப்படுத்துவது தொடர்பில் எது வித அறிவித்தலும் இல்லை என்று வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-252)

## இணைப்பாளரை நியமிக்குக!

(யாழ்ப்பாணம்)

இந்து சமயப்பணிகளை முன்னெடுக்கும் வகையில் இந்து கலாசார அமைச்சரின் இணைப்பாளர் ஒருவரை உடனடியாக அம்பாறை மாவட்டத்திற்கு நியமிக்குமாறு அன்னமலை இந்து கலைமன்றம் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனைக் கேட்டுள்ளது. (உ-18)


# யாழ். மாவட்ட அணி வெற்றிவாகை சூடியது

(யாழ்ப்பாணம்)

நேற்றுத் தம்புல்லவில் நடைபெற்ற மட்டக்களப்பு மாவட்டக் கிரிக்கெட் அணியுடனான போட்டியில் யாழ். மாவட்ட அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட அணி 94 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

கஜேந்திரன 30 ஓட்டங்களையும், மொகிடின் 15 ஓட்டங்களையும் பெற்றனர். யாழ். மாவட்ட அணியைச் சேர்ந்த ச.அகிலன் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ப.லவேந்திரா 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், வி.றஜீவ்குமார் 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கிருஷ்ணராஜா 15 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும், குணதாஸ் 4 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் பெற்றனர்.



வெற்றி பெற்ற யாழ். மாவட்ட அணி

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி விக்கட் இழப்பின்றி 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர். இதில் கே.றொகான் 39 ஓட்டங்களையும், உமாநாத் 36 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். இப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் வட கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களையும் வென்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

யாழ். மாவட்ட அணி வெற்றிக் களிப்புடன் இன்று திரும்புகிறது. (உ)

# ஆட்ட நாயகனாக றிக்கி பொண்டிங்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான மூன்றாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் 3:0என்ற அடிப்படையில் 112 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியஅணி 50ஓவர் முடிவில் 7விக்கெற்றுக்களை இழந்து 254ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. இதில் றிக்கி பொண்டிங் 101ஓட்டங்களையும், மைக்கல் பெவன் 57ஓட்டங்களையும் மத்தியூ கேடன் 42ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி. 47.3 ஓவர் முடிவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 142ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. பங்களாதேஷ் அணிசார்பில் அலோக் கபாலி 49ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணிசார்பில் ஹர்பி 16 ஓட்டங்களுக்கு 4விக்கெற்றுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் தலைவரான றிக்கிப் பொண்டிங் தெரிவுசெய்யப்பட்டார். பங்களாதேஷ் உடனான முதல் போட்டியை அவுஸ்திரேலியா 8விக்கெற்றினாலும் இரண்டாவது போட்டியை 9விக்கெற்றினாலும் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-68)

# விளையாட்டுச் செய்திகள்

# கியூபாவை பின்தள்ளிய அமெரிக்கா 47பதக்கங்களை வசப்படுத்தியது

பனாமாவில் நடைபெற்று வருகின்ற ''ப்பான்'' அமெரிக்கன் விளையாட்டுப் போட்டிகளில் இதுவரை முன்னணியில் நின்ற கியூபாவை பின்தள்ளிவிட்டு அமெரிக்கா முன்னணிக்கு வந்துள்ளது.

ஐந்தாவது நாள்போட்டி முடிவின்போது அமெரிக்கா 22தங்கப்பதக்கங்கள், 12வெள்ளிப் பதக்கங்கள், 13வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக 47பதக்கங்களைப் பெற்று முதலாம் இடத்தில் உள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள கியூபா 32பதக்கங்களைப் பெற்றுள்ளது. இதில் 18தங்கப்பதக்கங்கள், 6வெள்ளிப்பதக்கங்கள், 13வெண்கலப்பதக்கங்கள் அடங்குகின்றன. 3ஆம் இடத்திலுள்ள கனடா 2தங்கப்பதக்கங்கள், 9வெள்ளிப்பதக்கங்கள், 4வெண்கலப்பதக்கங்கள் அடங்கலாக 15பதக்கங்களைப் பெற்றுள்ளது.

மூன்றாம் இடம்முதல் ஆறாம் இடம்வரையிலான இடங்களை வெலிசுலா, மெக்ஸிக்கோ, பிரேசில் ஆகிய நாடுகள் வகிக்கின்றன. (உ-68)

# வெற்றிகளைக் குவித்துவரும் இலங்கை இராணுவக் கழகம்

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்டு வருகின்ற முன்னணி கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் கால்பந்தாட்டப் போட்டிகளின் முதல்சுற்றுப் போட்டிகளில் இராணுவக் கழகம் மீண்டும் நீர்கொழும்பு யுத் கழகத்தைப் பின்தள்ளிவிட்டு முன்னணிக்கு வந்துள்ளது.

இராணுவக் கழகம் இதுவரை விளையாடியுள்ள 9போட்டிகளில் 5போட்டிகளில் வெற்றிபெற்றதுடன் 4லில் சமநிலையடைந்து 19 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இதுவரை நடைபெற்ற எந்தவொரு போட்டியிலும் இராணுவக்கழகம் தோல்வியடையாமல் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் இடத்திலுள்ள நடப்புச்சம்பியனான நீர்கொழும்பு யுத் கழகமானது 5வெற்றி 3தோல்வி ஒரு சமநிலையுடன் 9போட்டிகளில் விளையாடி 16 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 3ம் இடத்திலுள்ள களுத்துறை புருஸ்ரார் கழகம் 7போட்டிகளில் விளையாடி 5இல் வெற்றி பெற்றதுடன் 2இல் சமநிலையடைந்துள்ளதுடன் 15 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இதேவேளை, 8 போட்டிகளில் விளையாடியுள்ள இரட்ணம் கழகம் 4வெற்றி, 2தோல்வி. 2சமநிலையுடன் 14புள்ளிகளைப்பெற்று 4ஆம் இடத்திலுள்ளதுடன். 7போட்டிகளில் விளையாடியுள்ள ''யாவாலேன்'' கழகம் 4வெற்றி, 2தோல்வி. 1சமநிலையுடன் 13புள்ளிகளைப் பெற்று 5ஆம் இடத்திலுள்ளது.

பொலிஸ் கழகம் 12புள்ளிகளுடனும், விமானப் படைக்கழகம் 9புள்ளிகளைப் பெற்றிருப்பதுடன் சவுண்டஸ், ஓல்ட்பெண்ஸ் கழகங்கள் தலா 8புள்ளிகளைப் பெற்றுள்ளதுடன், கடற்படை றினோன் கழகங்கள் தலா 6புள்ளிகளையும் பெற்று அடுத்த ஆறு ஸ்தானங்களையும் வகிக்கின்றன.

(உ-68)

# சர்வதேச தரத்திற்கேற்றதாக எஸ்.எஸ்.சி.மைதானம் மாற்றம்

இங்கிலாந்திலுள்ள லண்டன் லோட்ஸ் கிரிக்கெற் மைதானத்தின் தரத்திற்கு இலங்கையில் உள்ள எஸ்.எஸ்.சி மைதானத்தை தரம் உயர்த்துவதற்காக இரண்டு வருடங்கள் முன்னர் தெரிவிக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்த இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் திலங்க சுமதிபால முன்வைத்துள்ளார்.


தயா பெரராவின் தலைமையிலான சிங்கள விளையாட்டு அபிவிருத்தி செயற்குழு உறுப்பினர்களை அணமையில் சந்தித்தபோது திலங்க சுமதிபால இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட யோசனைகளின் பிரகாரம் மின்ஒளி வசதிகள், இலத்திரனியல் தொழில் நுட்பத்துடன் கூடிய ஓட்டவிபரப் பலகை, நவீன வசதிகளைக் கொண்டதாக வீரர்களின் தங்குமிட அறைகள் அத்துடன் கூரைகள் போடப்பட்ட பார்வையாளர் அரங்குகள் என்பன இந்த மைதானத்தில் அமைக்கப்படவுள்ளன.

மேலும் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபைத் தலைமையகத்தில் உணவு அறை, வரவேற்பறை, நூதன சாலை வசதிகள் போன்ற வசதிகளையும் செய்துகொடுக்க தமது கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை எண்ணியுள்ளதாக திலங்க சுமதிபால கூறியுள்ளார்.

இதேவேளை, எஸ்.எஸ்.சீ. கழகத்துடன் ஆலோசனைகளை நடத்தி மைதானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான திட்டங்களை இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் கட்டடக்கலைஞரான சுஜித் மோகோடி வகுப்பார் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-68)



மல்லாகம் கல்லாரை வளர்மதி சனசமூக நிலையத்தின் விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிவனேசன் உரைநிகழ்த்துவதையும் அருகில் சனசமூக நிலையத் தலைவர் சி.சௌந்தராஜன், செயலாளர் ஐ.சிற்றம்பலம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: த.கமலரூபன்)



உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் தெற்கு சுள்ளாகம் பொது நூலகத்தில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியினை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் உதவி நூலகர் சி.சிவஞானம், உடுவில் பிரதேச செயலர் ரி.தேவராஜன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

படம்: த.கமலரூபன்

# முன்னாள் இலங்கை வீரர் போட்டி மத்தியஸ்தராகிறார்

வருகின்ற செப்ரெம்பர் மாதம் இந்தியாவிற்கு எதிரான முக்கோண ஒருநாள் சர்வதேச கிரிக்கெற்போட்டி தொடரில் இலங்கை கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் றஞ்சன் மடுகல போட்டி மத்தியஸ்தராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஜக்மோகன டால்மியா இதனைக் கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளார்.

முன்னர் கன்பூரில் நடாத்த திட்டமிடப்பட்டிருந்த ஒரு போட்டி, ஆடுகளத்தில் சீரின்மை காரணமாக அகமதபாத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இந்திய மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ற போட்டிகளின் திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை.

இந்தியா, நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் வருகின்ற ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ள முக்கோண ஒருநாள் சர்வதேச போட்டிகளின் முதல் ஆட்டம் இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா 3தடவைகள் மோதவுள்ளன. இதில் கூடுதலான புள்ளிகளைப் பெறும் இருஅணிகள் இறுதிப்போட்டியில் விளையாட உள்ளன. இந்த இறுதிப்போட்டி கல்கத்தாவில் உள்ள ஈடன் காடின்ஸ மைதானத்தில் எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(உ-68)

# ஒலிம்பிக் போட்டிக்கு சவால் விடுக்கும் காற்று

எதென்ஸ்சில் அடுத்தவருடம் ஓகஸ்ட்மாதம் இடம்பெற விருக்கின்ற ஒலிம்பிக் போட்டிகளின்போது. காற்று பலமாக வீசினால் அது உலக சாதனைகளுக்கு தடையாக இருக்கும் என்று அஞ்சப்படுகின்றது.

இவ்வாரம் நடைபெற்ற பரீட்சார்த்த படகுப்போட்டிகளின் போது பலமாக வீசிய காற்று படகுப் போட்டியாளர்களுக்கு அச்சுறுத்தலாக இருந்ததென ஒலிம்பிக் ஏறபாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

எதென்சில் அடுத்தவருடம் ஓகஸ்ட மாதம் 13ஆம் திகதி அன்று ஒலிம்பிக்போட்டிகள் ஆரம்பமாக உள்ளன.

இந்த காலப்பகுதியில் போட்டியாளர்களுக்கு காற்று பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும், இதனால் நிலை நாட்டப்படும் சாதனைகள் குறைந்து போகலாம் என்றும் அஞ்சப்படுகின்றது. போட்டிகளின் போது காற்று செக்கனுக்கு இரண்டு மீற்றர் வேகத்தில் வீசினாலே சாதனைகள் அங்கீகரிக்கப்படாமல் போகலாம் என்று கிரேக்க மெய்வல்லுநர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

உ-68)

# பாவனையாளர்களுக்கு வரிவிலக்கு பொதுஜன ஐக்கியமுன்னணி கண்டிப்பு

(கொழும்பு)

வருமான வரித்திருத்த சட்டத்தின் மூலம் பாவனையளருக்கு வரிவிலக்களிப்பதற்கு இடமளிக்கப்பட்டதை பொதுஜன ஐக்கிய முன்னணி வன்மையாகக் கண்டிப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி புரள்வு வரி, பாதுகாப்புவரி போன்ற பல்வேறு வரிகளை பாவனையாளர்களிடம் இருந்து அறவிட்ட நபர்களுக்கு வரிச் சலுகை வழங்குவது என்ன நோக்கத்தைக் கொண்டது என்றும் அவர் கேள்வி எழுப்பி உள்ளார்.

முன்னைய ஆட்சியாளர்களால் வருமான வரிச்சலுகை வழங்கப படடுளளது.இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இருக்கின்ற நயவஞ்சகர்களுக்கு இந்த அரசாங்கம் வரிவிலக்கு அளித்துள்ளது.

பாவனையாளர்களிடம் அறவிட்ட பணத்திற்கே இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றார்.(தி)

# சமூக செயற்பாட்டு மையஏற்பாட்டில் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சமூக செயற்பாட்டு மையம் யு.என். எச்.சி.ஆரின் நிதியுதவியுடன் தற்போது சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுத்து வருகிறது.

இதனடிப்படையில்தற்போது மது ஒழிப்பு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கான சுகாதார போசாக்குத் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்புப் பயிற்சி, தையல் பயிற்சி போன்றவற்றை வழங்குவதுடன் யாழ்ப்பாணம் சாவகச்சேரி மற்றும் காரைநகர் பகுதிகளில் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகளும் நடாத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி மையமானது பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இல்லம் ஒன்றை அமைத்து அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்வரை பாதிக்கப்பட்டவர்களைப் பராமரித்தும் வருகின்றது.

மேலும் யு.எஸ்.ஏ.ஐ.டி, ஒ.ரி.ஐ.நிறுவனங்களின் அனுசரணையுடன் காரைநகர் கிராமங்களுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டமொன்றையும் இம்மையம் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (உ-07)

# மனித முன்னேற்ற நடுநிலையம் மீனவர் சங்கங்களுக்கு உதவி

(கொழும்புத்துறை)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு,கப்பலேந்தி மாதா மீனவர் சங்கம்,வெற்றிலைக்கேணி, கடற்றொழிலாளர் மீனவர் சங்கம், உடுத்துறை கடற்றொழிலாளர் மீனவர் சங்கம் ஆகிய வற்றிற்கு தலா 75 ஆயிரம் ரூபா நிதியை மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் சி.ஜி. ஜெயக்குமார் வழங்கியுள்ளார்.

மேலும் கட்டைக்காடு சகோதரப் பகிர்தல் வாழ்வு மகளிர் அமைப்பு, வெற்றிலைக் கேணிபுனித அந்தோனியார் சகோதரப் பகிர்வு மகளிர் அமைப்பு, உடுத்துறை சுகாதார பகிர்வு அமைப்பு ஆகியவற்றிற்கு தலா 50 ஆயிரம் ரூபாவும், பிலிப்பு நேரியார் மகளிர் அமைப்பிற்கு 35 ஆயிரம் ரூபாவையும் மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் சி.ஜி.ஜெயக்குமார் வழங்கியுள்ளார். (உ-51)

## தினமும் குடித்துவிட்டு வரும்

# மனைவியின் இம்சை பொறுக்காத கணவன் பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மதுப்பழக்கமுள்ள தன் மனைவியிடமிருந்து தனது பிள்ளைகளை மீட்டுத்தருமாறு கணவர் ஒருவர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அரியாலை மலர்மகள் வீதியைச் சேர்ந்த மேற்படி குடும்பஸ்தர் நேற்றையதினம் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்துள்ள இந்த முறைப்பாட்டில்,

தினமும் குடித்துவிட்டு வீட்டுக்கு வரும் எனது மனைவி 14 வயதிற்குட்பட்ட மூன்று பிள்ளைகளையும்இம்சைப்படுத்தி வருகிறார்.

அண்மையில் ஒருநாள் எனது கடைசிமகளை கழுத்தில் காலால் மிதித்து கொல்ல முயன்றதுடன், ஒருதடவை நெருப்புக்கொள்ளியால் அந்தப் பிள்ளைக்குச் சூடுபோட்டு துன்புறுத்தியுள்ளார்.

என்னாலோ அல்லது எனது பிள்ளைகளாலோ தொடர்ந்தும் இவருடன் வாழமுடியாது.

இவரிடம் இருந்து எனக்கு விவாகரத்துப் பெற்றுத்தர வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸார் இதற்குத் தக்கநடவடிக்கை எடுக்கத் தவறினால் தானும் பிள்ளைகளும் தற்கொலைசெய்து கொள்வதே ஒரேவழி எனவும் தெரிவித்துள்ளார். (உ-4)

# திருவிழா

(கொழும்புத்துறை)

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத் திருவிழா, எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதேவேளை 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆனையிறவு இராணுவ நடவடிக்கையின் போது மேற்படி ஆலயம் முற்றாக சேதம் அடைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-51)

# கருத்துரை

(கொழும்புத்துறை)

புனித பத்திரிசியார் வீதியில் உள்ள அகவொளி நிலையத்தில் நாளை பி.ப 3 மணிக்கு இடம்பெறவுள்ள முழு நிலாக் கருத்தரங்கில் யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கே. அன்ரன் டயஸ் ''கனவுகளும் வாழ்வும்'' என்ற பொருளில் கருத்துரையாற்றவுள்ளார்.

(உ-5)

## இலங்கையூடாக

# வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வந்த இருவர் கைது

(கொழும்பு)

வெளிநாட்டுப் பிரஜைகளை இலங்கைக்கு அழைத்துவந்து சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்கு அனுப்பிவந்த இரு வெளிநாட்டுப் பிரஜைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்றுக் கைது செய்துள்ளது.

பாகிஸ்தான்-இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இவ்விருவரும் தத்தமது நாடுகளின் பிரஜைகளை இலங்கைக்கு அழைத்துவந்து சட்டவிரோதமான முறையில் அவர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிவந்தனர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளை தடுக்கும் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இச்சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இலங்கையர் ஒருவரை வெல்லம்பிட்டியவில் வைத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அண்மையில் கைதுசெய்துளனர்.

இச்சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த முக்கிய நபர் ஒருவர் கிறீஸ் நாட்டில் இருப்பதாகவும் இவரின் சகாக்களே நேற்று கைது செய்யப்பட்டதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (தி)

# அமைச்சர் ரவூப்ஹக்கீம் இன்று வவுனியா விஜயம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்தலைவரும், அமைச்சருமான ரவூப்ஹக்கீம் இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா மாவட்டத்துக்கு செல்லவுள்ளார்.

மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் சின்னசிறப்பிக்குளம், சாளந்தைபுரம், பாவற்குளம், பட்டானிச்சூர், புளியங்குளம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக இவ்விஜயத்தின் போது அமைச்சர் கலந்துரையாடவுள்ளார்,

அமைச்சருடன் வீடமைப்புப் பிரதி அமைச்சர் வசீர் சேகுதாவுத், பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.ஹரீஸ் ஆகியோர் உட்பட பலரும் செல்லவுள்ளனர். (தி)

## யாழிலுள்ள கிறிஸ்தவ ஆலயங்களை

# துரிதமாகப் புனரமைக்க அமைச்சர் ஜோன் நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களைப் புனரமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக உள்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்றைய தனது யாழ்.விஜயத்தின் போது இங்கு உள்ள கிறிஸ்தவ ஆலயங்களை நேரில் சென்று பார்வைவிடுவதுடன், யாழ்.மறை மாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகையைச் சந்தித்து தான் இது பற்றி விரிவாக கலந்துரையாடவிருப்பதாகவும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்தார். (உ-10)

# நல்லூரான் திருவடிக்கு

## (இன்று எட்டாம் திருவிழா)



## உன் நாமம் ஓதாத நாளில்லை

அன்புடனே நல்லூரா ஆறுமுகா உன்நாமம்
என்றுமே ஓதாத நாளில்லைக்-கன்றாவைத்
தேடுவது போலுன்னைத் தேடுகிறே னோடிவந்து
கூடுகின்ற வாறெனக்குக் கூறு

- இறைமணி சி.இராசரெத்தினம்

## நல்லருள் புரிந்திடு ஐயா

பாட்டிற்கொரு மைந்தனே பார்வதியின் செல்வனே
பாவினால் வாழ்த்திடவே வரமொன்று தந்திடுவாய்
நாட்டிற்கோர் சமாதானம் நல்கிடவேண்டுமப்பா
நம்மினத்தோர் நலன்காக்க வந்திட வேண்டுமப்பா
நல்லையில் உறைந்துமே நல்லருள் புரிந்திடப்பா
தொல்லைகள் நீங்கிட சுகவாழ்வு தந்திடப்பா

- ந. கலைச்செல்வி

## நல்லைக் கனியே இரங்காயோ

அன்னே என்றன் உயிர்குயிரே நல்லைப்பதிக்கரசே
மன்னே என்னை ஆட்கொண்ட தேவ தேவே
பொன்னே ஏகப் பேரொளியே புனித அருளே பரிபூரணமே
என்னே எளியேன் துயர் தீர்ப்பது எந்நாளோ?

மண்ணின் மயங்கி வஞ்ச வினையால் மனந்தளர்ந்தேன்
எண்ணின் அடங்கா துயர்கொண்டு ஈனரோடு பொருதுகிறேன்
விண்ணின் சுடர் ஒப்ப நின்சேவடிக் கடிமை செய்வேனோ
கண்ணின் மணியே நல்லைக் கனியே இரங்காயோ?

- வை.சி.சிவசுப்பிரமணியம்

## வந்தெமக் கருள் செய்வாயே!

தெத்திவரு பச்சை மயில்மீதிலொரு குறவள்ளி
தெய்வானை அம்மை யுடனே
சேர்ந்துநனி ஆரோக ணித்துலவு செய்கின்ற
செந்தில் வடிவேலாயுதா
நந்தியுனை நாயினேன் நாடொறும் பணிதலுன்
நயனங்கள் காண்பதில்லையோ!
நந்தி வாகன னான நடராசன் மைந்தனே
நற் கணபதியின் அநுசா
மத்தினா லடிபட்ட மாயவன் மருகனே
மன்றுளா டியவன் மகனே
மல்குகண் ணீர்சொரிய வாடிடு மெமக்கு நீ
மாபெரும் வாழ்வை யருள்வாய்
வந்து நிறை கின்ற நல்லையில் வள்ளிதெய்வயானையொடு
வாழ்வுகொள் கந்த வேளே!
வடிவேல் கரங்கொண்டு வண்ணமயில்மீதேறி
வந்தெமக்கருள் செய்வாயே

- 'சமூக இரத்தினம்' எம்.கே.இளையப்பு ஜே.பி.

# வெங்காயத் தாளில் பழுப்பு நோய்த் தாக்கம்

(நவக்கிரி)

அச்சுவேலி, பத்தமேனி, குட்டிய புலம், நவக்கிரி தென்மூலை,தோப்பு ஆகிய பகுதிகளில் வெங்காயப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் பெரும் ஆர்வம் காட்டி வருகின்ற நிலையில், வெங்காயப் பயிரில் பழுப்பு நோய் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாகவே இந்நோய் ஏற்பட்டதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் இருந்து பெருமளவு வெங்காயம் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவருவதுடன், இங்குள்ள விவசாயிகள் வெங்காயம், புகையிலை போன்ற பணப் பயிர்ச் செய்கையில் பெரிதும் நாட்டம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-233)

# துப்பாக்கித் தோட்டாவுடன் வெளிநாட்டுப் பிரஜை கைது

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைத்தில் வைத்து துப்பாக்கித் தோட்டாக்களுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டநாயக்கா விமான நிலையத்தில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய இவரை,விமான நிலைய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சோதனை செய்தபோது, இவரிடம் துப்பாக்கித்தோட்டாக்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர் வெளிநாட்டு இராணுவம் ஒன்றில் கடமையாற்றி வருவது ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. (தி)

# குரங்குப் பாஞ்சான் கண்காணிப்புக்குழுவுக்கு பெரும் தலையிடி



# பாலர் கல்வியை பக்குவமாக ஊட்டும் வல்லமை பெற்றோர்க்கே உண்டு

## முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர்

(கோப்பாய்)

பாலர் கல்வியை பக்குவமாக ஊட்டுவதில் வல்லமை வாய்ந்தவர்களாக ஆசிரியர்களை விட பெற்றோர்களே திகழ்கின்றனர்.

குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட கடமைகளை நிறைவேற்றும் கைங்கரியத்தில் நேரமுகாமைத்துவத்தை இவர்களிடையே ஏற்படுத்துவதன் மூலமே பண்பான பிள்ளைப் பராயத்துக்கு வித்திட முடியும் என கோப்பாய் தெற்கு மாதர் சங்க முன்பள்ளி விளையாட்டுவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி.லொ.யோகராசா தெரிவித்தார்.

மாதர் சங்கத் தலைவி திருமதி சு.வெள்ளையங்கிரிநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

பிள்ளைகள் ஆராயவூக்கமுடையவர்கள். எனவே, அவர்களுக்குப் பொருத்தமான வகையில் நெறியாளகையை பெற்றோர்கள் மேற்கொள்ள வேண்டும்.முன்பள்ளிகள் எண்ணையும் எழுத்தையும் கற்பிக்கும் என எதிர்பார்க்கக் கூடாது.

மாறாக பாடசாலைகளில் காலடி எடுத்துவைக்கவுள்ள பிள்ளைகளின் அச்சத்தைப் போக்கி ஆரோக்கியமான ஒரு சூழலை அவர்களிடையே ஏற்படுத்துவதே இவற்றின் கருது கோளாகவும் சிறப்பம்சமாகவும்அமைந்துள்ளது என்றார்.(உ-75)

# அடுத்த பொதுத் தேர்தல் குறித்த நேர அறிவிப்பு எந்த நேரமும் வெளிவரலாம்

## சாத்தியம் உண்டென்கிறார் தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலைகளை அவதானித்துப் பார்க்கின்றபோதும் எந்த நேரத்திலும் பொதுத்தேர்தல் நடைபெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகிறது என தேர்தல் ஆணையாளர் தயானந்தா திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற உதவி, பிரதி தேர்தல் ஆணையாளர்களுக்கான மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

இத்தகைய சூழ்நிலையில் எந்த நேரத்திலும் தேர்தல் நடத்த உத்தரவு பிறப்பிக்கப்படலாம்.

எனவே,இதனை எதிர்கொள்ளக் கூடிய வகையில் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் சகலரும் தயார் நிலையில் இருக்கவேண்டும்.

வாக்காளர் இடாப்புக்களைப் பதிதல், உறுதிப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகள் காலவரன் முறையில் நிறைவேற்ற வேண்டும்.

தேர்தல் திணைக்கள ஏனைய நடவடிக்கைகளையும் உரிய காலத்தில் நிறைவேற்றி பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்றார். (உ-10)

# பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் தினத்தையொட்டி இடம்பெற்ற போட்டிகளின் போது வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் முழுநிலா நாள் நிகழ்வும் நாளை திங்கட் கிழமை பி.ப.4.00 மணிக்கு சங்கத் தலைவர் ந.சிவகடாட்சம் தலைமையில் வடகோப்பாய் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், "சுந்தரரின் தோழமை நெறி" எனும் பொருளில் யாழ். கல்வி வலய சேவைக்கால ஆலோசகர் திருமதி.பாலசறோஜா பாலசிங்கத்தின் விஷேட சொற்பொழிவும் இடம்பெறும். (உ-18)



# இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் ஆதரவில் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழா நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணிக்கு மானிப்பாய் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சோனாதிராஜா, தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் எஸ்.பாப்பா, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் எஸ்.மாதுளன், யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி முகாமையாளர் க.ரவீந்திரா, மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.பவநீதன், கட்டுடை ஜே/140 கிராம சேவை உத்தியோகத்தர் வெ.அருள்ராஜ், வலிகாமம் கொத்தணித் தலைவர் க.மெய்யழகன்,யாழ்.மாவட்ட தாச்சிச்சங்க போஷகர் செ.இலகுநாதன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன், இவ் இறுதிப் போட்டியில், நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் எதிர் கட்டுடை விநாயகர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன. (உ-18)

# இசைஅர்ச்சனை தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ள கார்த்திகைத் திருவிழாவில் இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

கோயிலின் உள் வீதியில் எட்டுத திசைகளிலும் இடம்பெறவுள்ள இவ் இசை அர்ச்சனையில் குடாநாட்டிலுள்ள சகலதுறை இசைக்கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் 'இசை அர்ச்சனை' தொடர்பான கலந்துரையாடலொன்று நாளை திங்கட்கிழமை மாலை 6.30மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளதாகவும், இதில் அனைத்துக் கலைஞர்களையும்கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (உ-18)



# வாழைச்சேனை அபிவிருத்திக்கு 45 கோடி நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வாழைச்சேனை நகர அபிவிருத்திக்கென 45 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழில்,சமுத்திரவள பிரதி அமைச்சர் மொகைதீன் அப்துல் காதரின் வேண்டுகோளுக்கு இணங்க பிரதமர் ரணில் விக்கிர சிங்கவின் பணிப்பின் பேரிலேயே மேற்படி 3 வருடத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால வன்செயல்களினால் வாழைச்சேனை நகரம் பெரும் பாதிப்புக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.(தி)

# மின் விநியோகம் தாமதம்

(நவக்கிரி)

அச்சுவேலி மேற்குப்பகுதியில் மின் இணைப்பு வழங்கப்பட்டு ஒரு வாரகாலமாகியும் அப்பகுதி வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-233)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்திய கூட்டுறவுத்தின விழாவை கொத்தணியின் பொது முகாமையாளர் க. சுதாகரன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், மேற்படி விழாவையொட்டி நடத்தப்பட்ட மகளிர் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற ஒருவருக்குப் பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேச மூர்த்தி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இரு பதிவுத் திருமணங்கள் புரிந்த வல்வை வாசிக்கு 7வருட கடூழியச் சிறை

(திருநெல்வேலி)

சட்டத்திற்கு புறம்பான வகையில் இரண்டு பதிவுத்திருமணங்களைப் புரிந்த நபருக்கு 7 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை சமரபாகுவைச் சேர்ந்த மேற்படி நபர் நேற்று முன்தினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றின் முன் நிறுத்தப்பட்டு குற்றம் நிரூபிக் கப்பட்டதையடுத்து நீதிபதி கே.அரிய நாயகம் மேற்படி தீர்ப்பை வழங்கினார். (உ-43)

முரண்பாட்டுக்கு முடிவுதேடி

# இந்திய உயரதிகாரிகள் குழு நேற்று பாக். சென்றடைந்தது

(புதுடில்லி)

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட 50 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையே பகையுணர்வைப் போக்குவது, நம்பிக்கையை வளாப்பது, பிரச்சினைகளைத் தீர்ப்பது ஆகியனகுறித்து பாகிஸ்தானில் நடைபெறும் 2நாள் மாநாட்டில் இக்குழுவினர் பங்குபற்றவுள்ளனர்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களான ராம்ஜித் மலானின், லாலுபிரசாத் யாதவ், ஜஸ்வந் அகல்வாழியா, மனிசங்கர் அல்வேட், மாக்கிரட் அல்வேட் ஆகியோர் இக்குழுவின் முக்கிய உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தானின் முக்கிய அரசியல் கட்சிகளைச்சேர்ந்த மூத்த தலைவர்களுடனும் இக்குழுவினர் கலந்துரையாடுவர் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாகிஸ்தான் சென்றுள்ள இக்குழுவினருக்கு இந்திய நிலைப்பாடுகுறித்து நன்றாக எடுத்துக் கூறிய பின்னரே அவர்களை அங்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், இவர்களது இந்த விஜத்தின் முடிவில் இருநாடுகளுக்கும் இடையே முக்கியதிருப்பம் ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகவும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா நம்பிக்கை செளியிட்டுள்ளார். (உ-2)

# அமெரிக்கப் பிரதித் தளபதி ஓய்வுபெறத் தீர்மானம்

(வாஷிங்டன்)

ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட யுத்தத்தின் போது, அமெரிக்கப் படையினரின் பிரதித் தளபதியாக செயற்பட்டுவந்த லெப்ரினன் ஜெனரல் மைக்கல்ரிலொங் தான் ஓய்வு பெறுவதாக தெரிவித்துள்ளார்.

இவர் ஓய்வுபெறுவதாக தீர்மானித்தையடுத்து அமெரிக்காவின் இராணுவ மத்திய கட்டளையகத்தில் இரண்டாவது பாரிய மாற்றம் ஒன்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மாதம் அமெரிக்க இராணுவத் தளபதி ரொமி பிராங்ஸ் ஓய்வுபெற்றதையடுத்து இவரது பதவிக்கு ஜோன் அபிஜேஷ் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும் மைக்கல் ரிலொங்கிற்கு பதிலாக புதிய தளபதியாக யாரை நியமிப்பது என்ற முடிவு இன்னும் எடுக்கப்படவில்லையென இராணுவ மத்திய கட்டளை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (உ-2)

உள்நாட்டுப் போரினால்

# பாதிப்புற்ற லைபீரியப் பொதுமக்களுக்கு உணவு விநியோகிக்க மார்க்கமில்லை

(வாஷிங்டன்)

லைபீரியாவின் பிரதான துறைமுகமான மன்ரோவியாவைத் திறந்துவிடுமாறு அமெரிக்கா மற்றும் மேற்கு ஆபிரிக்க அதிகாரிகள் லைபீரிய தீவிரவாதிகளிடம் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

லைபீரியா தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் பகுதியில் இருக்கின்ற இத்துறைமுகம் மூடப்பட்டிருப்பதனால், அந்நாட்டில் தற்போது இடம் பெற்றுவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உணவுகளை விநியோகிக்கும் மார்க்கம் தடைப்பட்டுள்ளது.

லைபீரியாவில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு அமைதி காக்கும் படையினர் மன்ரோவியாவிற்குள் சென்றுள்ள போதிலும், ஜனாதிபதி சார்ள்ஸ் ரெயிலர் தனது அதிகாரங்களை உதவி ஜனாதிபதியிடம் கைளித்தால் மட்டுமே தமது போராட்டம் கைவிடப்படும் என்றும்,

துறைமுகம் மீண்டும் திறக்கப்பட வேண்டுமானால், சார்ள்ஸ் ரெயிலரின் படைகள் மனரோவியாவிலிருந்து முதலில் வாபஸ் பெற வேண்டுமென்றும் தீவிரவாதிகள் நிபந்தனைகளை விதித்துள்ளனர். (உ-2)

# நடிகர் சத்தியராஜிடம் சகிப்புத்தன்மை இல்லை

அவரே கூறுகிறார்

(சென்னை)

அரசியலில் ஈடுபடுவதற்குத்தான் விரும்பவில்லையென நடிகர் சத்தியராஜ் கூறியுள்ளார்.

சினிமாவில் நடிக்க ஆரம்பித்து 25ஆண்டுகள் நிறைவுபெற்றதையடுத்து அவர் நிருபர்கள் மத்தியில் பேட்டியளித்திருந்தார்.

இதன்போது சினிமா நடிகர்கள் சிலர் அரசியலில் ஈடுபாடு கொண்டுள்ளார்கள். இந்தவகையில் உங்களுக்கு அரசியலில் ஈடுபடும் விருப்பம் உண்டா என கேட்கப்பட்ட போது,

அரசியலில் ஈடுபடுவதற்கான பொறுமையும், சகிப்புத்தன்மையும்



என்னிடம் இல்லை அதனால் நான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை என அவர் கூறியிருந்தார். (உ-2)

# தமிழக முதல்வருக்கு சென்னையில் கோயில்

(சென்னை)

தெய்வங்களுக்கும், நடிகைகளுக்கும் கோயில்கட்டும் காலம் போய் தற்போது அமைச்சருக்கு கோயில்கட்டும் காலம் வந்துள்ளது.

இந்தவகையில் கோயில் கட்டப்படும் அமைச்சர் வேறு யாருமல்ல தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவேதான்.

இக்கோயிலை அ.தி.மு.க. பிரமுகர்களில் ஒருவரான துரை கவுண்டர் என்பவரே கட்டிவருகிறார்.

தனது இந்த நடவடிக்கை குறித்து நிருபர்களுக்கு பேட்டியளிக்கையில் துரை கவுண்டர் கூறியதாவது,

ஜெயலலிதாவை அ.தி.மு.க.வினர் அம்மா என்று அழைக்கின்றனர். அது மட்டுமன்றி கடந்த பலமாதங்களுக்கு முன் இவரை ஆதிபராசக்தியாகச் சித்திரித்து சுவரொட்டிகளை அச்சிட்டனர். தற்போது நான் அவருக்கு கோயில் கட்டுகிறேன் என்றார்.

சென்னை, கலைஞர் கருணாநிதி நகரில் கணனி விற்பனை தொழில்செய்து வரும் இவர், தனது வீட்டின் பூஜைஅறையில் 2அடி உயரமான ஜெயலலிதாவின் சிலையை வைத்து அதற்கு பட்டுச் சேலை அணிவித்து சந்தனம், பால், தண்ணீர் ஆகியவற்றால் அபிஷேகம் செய்து வருவதாகவும்,

தற்போது சென்னையை அடுத்துள்ள மலையடிவாரத்தில் 4அடி உயரத்தில் வெண்கலத்தினாலான ஜெயலலிதாவின் விக்கிரகம் வைத்து கட்டப்படும் கோயிலுக்கு ஆதிசக்தி அம்மா திருக்கோயில் எனப் பெயரிடத்திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

ஜெயலலிதா ஒரு கடவுள். இவருக்கு ஏன் கோயில் கட்டக் கூடாது? ஏழைகளுக்கு உதவி வரும் இவருக்கு கோயில்கட்ட வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ-2)

# பலஸ்தீன அதிகாரிகள் மீது இஸ்.தாக்கு

# 3 மாதகால யுத்தநிறுத்தத்திற்கு முடிவு

(ரெல்அவிவ்)

பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியில் உள்ள அகதிகள் முகாம் ஒன்றின் மீது இஸ்ரேலியப் படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



அண்மையில் இஸ்ரேலினால் விடுவிக்கப்பட்ட பலஸ்தீன சிறைக் கைதியொருவர் தனது மகளுடன் மகிழ்ச்சியில் திளைக்கிறார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலின்போது கமாஸ் போராளிக் குழுவைச் சேர்ந்த இருவரும் இஸ்ரேலியப் படைவீரர் ஒருவருமே கொல்லப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் கடந்த 3மாத காலமாக அமுலிலிருந்து வந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை இஸ்ரேலியர் மீறியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனிடையே இஸ்ரேலியரைப் பழிவாங்கும் நோக்கில் அவர்கள் மீது பதில்தாக்குதலை நடத்தப் போவதாக கமாஸ் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, இஸ்ரேலியரின் தாக்குதல்களை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் இருவர் இஸ்ரேலியரால் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் இஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதுடன் மற்றைய நபர் கண்ணீர்ப்புகையினால் பாதிக்கப்பட்டும் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் இஸ்ரேல் பலஸ்தீன சமாதான முன்னெடுப்புக்கள் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.(உ-2)

# சவூதி குண்டுவெடிப்பு வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் விடுதலை

(ரியாத்)

கடந்த 2000,2001ஆம் ஆண்டுகளில் சவூதி அரேபியாவில் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதலை நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தண்டனை விதிக்கப்பட்டிருந்த 7வெளிநாட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5பிரித்தானியர்களும், கனேடியர் ஒருவரும், பெல்ஜிய நாட்டவர் ஒருவருமே விடுதலைசெய்யப்பட்டவர்களாவர்.

இந்த நபர்கள் மீது கருணை கொண்டு விடுதலைசெய்யப்பட்டதாகவும் இதனையடுத்து இவர்கள் அனைவரும் சவூதி அரேபியாவை விட்டு வெளியேறிவிட்டார்கள் எனவும் சவூதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் 2பேரிற்கு மரண தண்டணை விதிக்கப்பட்டிருந்ததுடன், ஏனையோரிற்கு அதிக ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பணிநீக்கம் செய்யப்பட்ட 8,063பேர் நாளை மீள இணைகின்றனர்

(சென்னை)

தமிழ்நாட்டில் பணிநீக்கம் செய்யப்பட்ட மாநில அரச ஊழியர்களில் 8ஆயிரத்து 63பேர் நாளை முதல் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.

இதற்கான உத்தரவு அனைத்துத் துறையினருக்கும் பிறப்பிக்கப்பட்டு விட்டதாக தமிழக அரசின் தலைமைச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் மாலை தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

உச்சநீதிமன்ற உத்தரவை செயற்படுத்துவதென இந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதாக கூறிய அவர் மீண்டும் வேலையில் சேரும் ஊழியர்களுக்கு கடந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து ஊதியம் வழங்கப்படும் என்றார்.

இதேவேளை, எஞ்சிய 6ஆயிரத்து 72ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக உயர் நீதிமன்றின் முன்னால் நீதிபதிகள் 3பேர் விசாரணை செய்து முடிவு செய்வர் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (உ-2)

# பாக்.சிறுவனை விடுவிக்க இந்தியப் பிரதமர் உத்தரவு

(சென்னை)

பாகிஸ்தான் எல்லையைக் கடந்து இராஜஸ்தானுக்குள் நுழைந்த 13 வயதுச் சிறுவன் முனீரை விடுவிக்குமாறு நல்லெண்ண அடிப்படையில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் ஸ்ரீகங்கா நகர் மாவட்டத்திற்குள் நுழைந்த அந்த சிறுவன் இந்தியப் படையினரால் உடனடியாகக் கைது செய்யப்பட்டான்.

இந்திய, பாகிஸ்தான் மக்களிடையே தொடர்புகளை வலுப்படுத்த பிரதமர் வாஜ்பாய் மேற்கொள்ளும் முன்முயற்சியின் பின்னணியில் சிறப்பான கவனத்தின் அடிப்படையில் அந்தச் சிறுவனை பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-2)

# கியூபாவிலிருந்து வெளியேறிய முன்னாள் தலைவர் மீண்டும் கியூபாவுக்கு

(ஹவானா)

கியூபாவிலிருந்து வெளியேறிய தலைவர்களில் ஒருவரான எலோ ஜிக்குடஷா மெனோயோ அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் முகமாக மீண்டும் கியூபா சென்றுள்ளார்.

சோசலிசக் கொள்கைகளைக் கொண்ட தமது நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் முகமாகவே தான் கியூபாவிற்கு வந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளித் தலைவரான இவர் 22 வருட காலமாக கியூபா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். 68 வயதான இவர் 1986ஆம் ஆண்டு முதல் மியாமியில் வாழ்ந்து வந்தார்.

எனினும் இவரது வருகை கியூபாவில் எந்தவொரு புரட்சியையும் ஏற்படுத்தவில்லையென பிடல் காஸ்ரோவின் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பிடல் காஸ்ரோவின் போராட்டக் குழுவுக்கு ஆதரவு வழங்கிவந்த மெனோயோ, 1964ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு கியூபா சிறையில் அடைக்கப்பட்டார். பின் 1986ஆம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.(பி-2)

கடும் சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ் செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்
குறள் -

# வலம்புரி

## கட்டியம் கேட்கிறது

நாட்டின் அரசியல் வரலாறு மிகவும் அபாயகரமான காலத்தை எதிர்நோக்குகிறது. நாட்டின் ஆட்சியாளர் ஒருவர் நாட்டின் ஒருபகுதியை இன்னுமொருவருக்குக் கையளிகக்த் தயாராகுவது இதுவே முதற்தடவையாகும் இவ்வாறு கூறியிருப்பவர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி போலியான சமாதானத் திட்டமொன்றை அரசு முன்னெடுத்துள்ளதாகவும், ஈழம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் விடுதலைப் புலிகளிடம் நாட்டின் ஒரு பகுதியைக் கையளிப்பதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சி செய்கிறார் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் இக் குற்றச்சாட்டு இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியைச் சந்தித்து விளக்கமளித்த பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளதென்பது இங்கு நோக்குதற்குரியது.

இடைக்கால சபை தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் கையளக்கப்ப்ட்ட திட்டவரைபை மாற்றம் செய்யாமல் தன்னிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொண்ட ஜனாதிபதி இப்போது ஈழம் என்ற பெயரை விடுத்து தனி நாட்டைக் கொடுக்கவே பிரதமர் ரணில் முயற்சி செய்து வருகிறார் எனச கூறியிருப்பதைப் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான கட்டியமாகக் கருதிக் கொள்ள முடியும்.

ஒரு புறத்தில் சமாதானத்தை ஆதரிப்பதுபோல் கூறிக்கொள்ளும் ஜனாதிபதி மறுபுறத்தில் சமாதானத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வருகிறார் என்பது மறைமுகமான விடயமல்ல. ஆனால், ஒரு நாட்டின் அதிகாரமிக்க தலைவர் அடிக்கடி தனது கருத்துக்களை மாற்றிக் கொள்வது நாட்டுக்கு மிகப் பெரும் சாபக்கேடாகும்.

போலியான சமாதானத்தை அரசு கடைப்பிடிக்கிறது என்ற ஜனாதிபதியின் கருத்து அரசு சமாதான முயற்சியில் அக்கறை காட்டாமல் நடந்து கொள்வது போன்ற தோற்றப்பாட்டை வெளிப்படுத்தி, அதன் மூலம் சமாதான முயற்சியில் தான் மிகுந்த அக்கறையுள்ளவராகக் காட்டிக் கொள்வது ஜனாதிபதியின் நோக்கமாகும். அதேநேரம், அரசு நாட்டைப் பிளவுபடுத்தப் போகிறது என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, சிங்கள பேரினவாதத்தின் ஆதரவைப் பெறுவதும், அந்த ஆதரவை மையமாகக் கொண்டு சந்தர்ப்பமும், தேவையும் ஏற்படும்போது தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்தைப் பிரயோகிதது்ப் பாராளுமன்றத்தை கலைப்பதும் ஜனாதிபதியின் இலக்காகும். இதன் கட்டியமாகவே, ஜனாதிபதியின் சமகாலக் கருத்துக்கள் அமைந்துள்ளன.

# இன்னல் தரும் செயல்களை விடுத்து

# இயேசுவுடன் இரண்டறக் கலப்போம்

இன்று சமூகத்திலே நாம் கேள்விப்படுகின்ற சமூகச் சீரழிவுகள் பலரது உள்ளங்களை வேதனைக்கு உள்ளாக்குகின்றன. நாம் வாழுவது எமது சமூகத்திலா? என்று கேட்கத் தூண்டுகின்றது. இந்தளவிற்கு மனித மனங்கள் பணபற்றுப் போய் விட்டனவா? மனிதாபிமானமற்ற செயல்கள ஏன் மலிந்து விட்டன? பணத்தைப் பெருக்குவதிலும, சொத்துக்களைச் சூறையாடுவதிலும், இன்னுமொருவன் சொத்துக்கு உரிமை கொண்டாடுவதிலும் பலர் கருத்தாய் இருக்கின்றார்கள். உரிமை உள்ளவனுக்கு உரியதை மறுப்பதிலும இன்று நதி சமானத்துக்காகப் பாடுபடும் சமயவாதிகளும் கூட பாரபட்சம் காட்டிச் செயல்படுகின்றார்கள். இந்நிலையில் சமூக நிலைகள் எப்படி மாற்றம் பெறும. திருவிழாக்களும், பேர் புகழ் என்பனவும் மட்டுமே மிஞ்சுகின்றன. பண்பு



காட்டவல்லன. ''கடவுளின் தூய ஆவியாருக் துயரம் வருவிக்காதீர்; மனக்கசப்பு, சீற்றம, சினம, கூக்கல, பழிச்சொல எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களை விடடு நீக்குங்கள். ஒருவருக்கொருவர் நன்மை செய்து

## பரமபிதா காட்டிய பாதை

விருத்தியில் மாற்றம் கேள்விக் குறியே?

### நன்மை புரிவதில் கருத்தாய

மக்களின் செயல்கள் இறைவனின் கோபத்தைத் தூண்டுகின்றன. எனவே மக்கள் மனங்களில் மனமாற்றம் வேண்டும. வெறுமனே ஆலய தரிசனங்கள் மீட்பின் சுவடுகள் ஆகமுடியாது. இரக்கத்தின் சுவடுகளே இறைவனின் கருணையைக்

பரிவு காட்டுங்கள். (எபேசி4 :30-32) இவ்வாறு நடக்க வேண்டும் என்பது தான் இறைவனின் விருப்பமாக இருக்கின்றது. ஆகவே நாம் நிச்சயமாக நன்மை புரிகின்றவர்களாக மாறவேண்டும். அல்லது நாமும் தணடனைத் தர்ப்புக்கு தப்பமுடியாது.

### இறைவிருப்பை நிறைவேற்றல்

விண்ணுலகில இருந்து மண்ணுலகிற்கு வந்த தேவன் இறைதந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே, தனது பணி என்று கூறினார். அதனை தம் வாழ்வின் இறுதி வரை நிகழ்த்தியும் காட்டினார். இறைவனின் பிள்ளைகளாக ஆக்கப்பட்டுளள நாம் ஒவ்வொருவரும் எம்மாத்திரம்? கடவுளின் கையில் உள்ள மண்பொம்மைகள் நாம.காறறடைத்த பைகள். இபபடி இருக்கும்போது பெருமை பாராட்ட எமக்கு என்ன தகுதியுண்டு. இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதிலே தான் நாம் பெருமை கொள்ள வேண்டும். ''என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும என்னிடம வர இயலாது'' (யோ.6:44) ''ஆகவே நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப் போல ஆகுங்கள்;'' (எபேசி 5:1) என்று புனிதபவுல் எமக்கு அழைப்பு விடுக்கின்றார்.

### காலத்தை பயன்படுத்தல்

காலம் பொல்லாதது.நாட்களும் பொல்லாதவை. கால் போன போக்கில் நாம் சென்றால் பாதாளத்தில தள்ளப்பட்டு வேதனைக் கடலில் மூழ்கித் தவிப்போம். இளமையின் துடுக்குகளால் இறுமாப்பாய வாழ்ந்து இவ்வுலக சுகபோகங்களை அனுபவிப்பதிலே விட்டில் பூச்சிகளாக அலைந்து வெந்தணலில் நொந்தழியாது, ''வாழ்க்கை'' என்பது இறைவன் அளித்த கொடை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் பறிபட்டதே அன்பு செய்து வாழாத வாழ்வைப் [illegible] லாப் பண்டம் போல் சுவையற்றது, மணமற்றது, குணமற்றது, அர்த்தமற்றது, நிம்மதியற்றது. எனவே நாம் பயனுள்ள கருவிகளாக, படகைக் கரை சேர்க்கும் துடுப்புககளாக, எரியும் மெழுகுதிரிகளாக, மணக்கும் சந்தனமாக மாறும்போதே நாம் இறைவனின் பிள்ளை என்ற பெருமையைப் பாராட்ட முடியும்.

### இயேசுவின் அன்பே மாதிரி

எல்லாம் வல்ல இறைவன் தமது அன்பின் வெளிப்பாடாக இயேசுக்கிறிஸ்துவை எமக்கு மேல்வரிச் சட்டமாகத் தந்தார். இறைவனோடு நாம் அன்புறவு கொள்ள எம்மை வழிப்படுத்துபவர் இயேசுக்கிறிஸ்துவே. அவர் இவ்வுலகிலே ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், ஏதிலிகள் ஆகியோருக்குக் கைகொடுத்துதவி தமது அன்பை இன்னதென்று வெளிப்படையாக நிரூபித்துக் காட்டினார். நாம் செய்ய வேண்டிய கடமைகள் இன்ன இன்னதென்று வாழ்ந்து காட்டியவர். தமது தாயை சிலுவை மரத்தில் தொங்கும் போதே அன்னை மரியாளை தமது சீடரிடம் ஒப்புவித்து

**அருள்தாசன்**

தமது உயிரை நீத்தவர். எனவே இயேசுவுக்காகத் தம்முயிறை தியாகம் செய்ய வீரப்புனிதர்களை நாம் பின்பற்றி இயேசுக்கிறிஸ்து வழியாகத் தந்தையாம் இறைவனுக்கு புகழாரம் சூட்ட வேண்டும் என்றே திருச்சபை எமக்குக் கற்பிக்கின்றது. இயேசுவின் வழியில் நாமும் செல்வோம்.

***

## ஊழியர் சேமலாப நிதியை விரைந்து பெறத் திட்டம்

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியை துரிதமாக மீளப் பெற்றுக் கொடுப்பதற்கான விசேட செயல்திட்டமொன்றை அரசு நடை முறைப்படுத்தவுள்ளது என தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஊழியர் சேமலாப நிதியை தனியார் மயப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் எழுப்பிய வாய் மூலக் கேள்விக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், ஊழியர் சேமலாப நிதியம் தற்போது பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தனியார் மயப்படுத்த அரசு எடுத்த தீர்மானம் தொடர்பாக தொழில் அமைச்சர் என்ற ரீதியில் தமக்கு எதுவும் தெரியாது.

மத்திய வங்கியின் கணனிகளுக்கும் தொழில் அமைச்சில் உள்ள கணனிகளுக்கும் இணைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊழியர்களின் சேமலாப நிதியை மாவட்ட மட்டத்தில் விரைவில் வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

(தி)

## கலைஞர்களைப் பாராட்டி கௌரவிக்க ஏற்பாடு

(பருத்தித்துறை)

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, தனது எல்லைக்குள் வசிக்கும் கலைஞர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பிரதேசசபைச் செயலாளர் எஸ்.பசுபதி மேற்கொண்டுள்ளார்.

இந்த வகையில், தங்கள் பிரதேசங்களில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள பற்றிய விபரங்களைத் தந்துதவ வேண்டுமென பிரதேச சபைச் செயலாளர் சகல சனசமூக நிலையங்களையும் கேட்டுள்ளார்.

(உ-52)

## ஆடிவேல் வீதியுலா செவ்வாயன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான வருடாந்த ஆடிவேல வீதியுலா எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 14ஆம் திகதி வியாழக்கிழமை வரையான மூன்று தினங்கள் பக்திபூர்வமாக இடம் பெறவுள்ளன.

12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இந்த ஊர்வலம் ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி வழியாக மு.ப 11.00 மணிக்கு வீரமாகாளி அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து பி.ப. 1.00 மணிக்கு ஆரம்பமாகி யாழ். நகர் அனைத்து வீதியூடாக மாலை 5.30 மணிக்கு வண்ணார் பண்ணைச் சிவன்கோவிலைச் சென்றடையும்.

மறுநாள் காலை 8.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு காங்கேசன் துறை வீதி வழியாக பகல் 12.00 மணிக்கு வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயத்தைச் சென்றடையும். அங்கிருந்து 3.00 மணிக்கு புறப்பட்டு மாலை 6.00மணிக்கு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தைச் சென்றடையும்.

அதற்கு அடுத்த நாள் காலை 9.00மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருநெல்வேலி வழியாக அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயத்தை பகல் 12.00 மணிக்கு சென்றடையும். மாலை 3.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கல்வியங்காடு ஊடாக மாலை 5.00மணிக்கு ஆலயத்தை வந்தடையும் (உ)

## யாழ்.குடாநாட்டில் உள்ள 81.5 கி.மீ.நீளமான கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில்,யாழ் குடாநாட்டில 81.5 கிலோமீற்றர் நீளமான கடற்பிரதேசம் மீன்பிடிக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச மாணவர் பேரவை வெளியிட்டுள்ள புள்ளி விபர அறிக்கையில் இது விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், வலிகாமம் வடக்கு, அரியாலை, தென்மராட்சி, கிளாலி, நாகர்கோவில் மண்டைதீவு பிரதேச கடற்பகுதிகள் இதில் அடங்குகின்றன்.

இதனால் 4 ஆயிரத்து 436 மீனவக்குடும்பங்கள் தமது தொழில் வாய்ப்பை இழந்த நிலையில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்க்கையை ஓட்டி வருகின்றன.

மேற்படி பிரதேசங்களில் 67 கிராம சேவகர் பிரிவுகள் அடக்குவதுடன், 16 பாடசாலைகள், 246 ஆலயங்கள் என்பனவும் உள்ளடங்கியுள்ள நிலையில் செயலிழந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(உ-4)

## நடப்பாண்டு நிர்வாகிகள்தெரிவு

(சுண்டுக்குளி)

யாழ்.மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்க நடப்பாண்டிற்கான நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்ற போது, தலைவராக கே.ஸ்ரீராஜன், உபதலைவராக ஆர்.நகுலேஸ்வரன், செயலாளராக ஏ.அல்பேட், பொருளாளராக எஸ்.பஞ்சலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-10)

## சிறுமியின் கைச்சங்கிலி அபேஸ்

(யாழ்ப்பாணம்)

வீட்டின் முன்னால் நின்ற சிறுமியின் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான கைச்சங்கிலி,மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வேளை இராசாவின் தோட்ட பகுதியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் செ.பிரியதர்சிலா என்ற சிறுமியின் கைச்சங்கிலியே அபகரிக்கப்பட்டுளளது

### திசரி தியானம்

## ஆன்மாவை உணருங்கள்

உண்மையான ஆன்மா, நமது ஆசைகளாகிய மேகங்களுக்குப்பின் மறைந்திருக்கின்றது. ஆன்மாவின் இருண்ட பகுதி ஐம்புலனகளின் உதவியுடன் வேலைசெய்வதால், உண்மையான ஆன்மாவின் விருப்பம் வெளியே மறைக்கப்பட்டிருக்கின்றது. இருண்டிருக்கின்ற ஆன்மாவை வென்று இறைவனது பேரருளை அனுபவிப்பதற்காக இந்தச் சிக்கலான முடிச்சை அவிழ்க்கும் தைரியம் கொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சயன்ஸ் அக்கடமயின் 2003ம் ஆண்டுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சையின் பரிசளிப்பும் கணிப்பீட்டு அறிக்கை வழங்கலும் இன்று மாலை 4 மணிக்கு பி.ஜெயக குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராக நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் எஸ்.சிவபா தசுந்தரம் கலந்துகொள்ளவுள்ளார். (ந-3)

## உள்துறை...

பேசுவதுடன் யாழ்.பொலிஸ் நிலை யம் மற்றும் சிறைச்சாலை என்பவற றுக்கும் அமைச்சர் செல்லவுள்ளார்.

பொலிஸ் நிலையத்திற்குச் செல் லும் அமைச்சர் யாழ்.குடாநாட்டில் பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து பொலிஸ் நிலையப் பொறுப பதிகாரியுடன் கலந்துரையாடுவார்.

அமைச்சருடன் அமைச்சின் செய லாளர் மற்றும் சிரேஷ்ட அதிகாரி கள் பலரும் வருகை தரவுள்ளனர். (த)

## சிவகுருநாதன்...

... பணியாற்றியுள்ளார்.

கந்தர்மடத்தை பிறப்பிடமாகக் கொண்ட சிவகுருநாதனின் இறுதிக் கிரிகைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பொறளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இவரது மறைவு குறித்து சட்ட மாணவர் இந்து மகா சபை உட் பட பல்வேறு பொது அமைப்புக் களும் பிரமுகர்களும் தமது அனு தாபங்களைத் தெரிவித்துள்ளனர். (ந-3)

## யாழ்.மாவட்ட...

இவ்வெழுச்சிப் பேரவை அம் மாவட் டத்தின் தேவைகள் பிரச்சினைகளை இனங்கண்டு உரியவர்களுடன் தொடர்பு கொண்டுஅதனைத் தீர்த்து வைக்கப்பாடுபடும்.

இப பேராளர் மாநாட்டில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு வாகன ஒழுங்குகள் பிரதேச ரீதியாக மேற் கொள்ளப்பட்டுள்ளது. (இ)

## வான் விபத்து

(யாழ்ப்பாணம்)

நிறுத்திவைக்கப்பட்டிருந்த வானின் மீது வேகமாக வந்த பிறிதொரு வான் மோதியதில் இரண்டு வான் களும் பலத்த சேதத்திற்குள்ளான துடன் ஒருவர் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் திருநெல்வேலிச் சந் திப் பகுதியில் இடம்பெற்றது.

திருநெல்வேலிச் சந்தியில் நிறு த்திவைக்கப்பட்டிருந்த வானின் மீது புன்னாலைக்கட்டுவனில் இருந்து வந்த வான் மோதியதாகத் தெரி விக்கப்படுகிறது. (த)

## யாழ். ப.நோ.கூ.ச. தலைவராக சிறில் தெரிவு

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத் தின் பொதுக்கூட்டம் நேற்றுக் கூட் டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சங்கத்தின் தலை வராக சொலமன் சூ.சிறில், உப தலைவராக ச.த.கணநாதன் ஆகி யோரும், இயக்குநர்களாக சபா. தியாகராஜா, அ.அலெக்ஸ், மு. கிருஷ்ணசாமி, மு.ஜெ.சுஜீந்திரன், ந.மகேந்திரராஜா ஆகியோரும் ஏக மனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (உ-16,110)

## விளையாட்டு விழா

(சில்லாலை)

பண்டத்தரிப்பு பணிப்புலம் அம் பாள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிறுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அம்பாள் சன சமூக நிலைய உபதலை வர் வே.இன்பராஜன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சில்லாலை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாட சாலை அதிபர் சரோஜினிதேவி கன கரத்தினமும்

சிறப்பு விருந்தினர்களாக பணிப் புல கிராம சேவையாளர் ஜீவராஜா வலி.மேற்கு சனசமூக நிலைய அபி விருத்தி உத்தியோகத்தர் கேமா சிவ சோதி வலி.மேற்கு முன்பள்ளி பிர தேச இணைப்பாளர் ந.நிரஞ்சனா சுழி புரம வடக்கு ஆறுமுக வித்தியாலய அதிபர் ந.பாலச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(ந-3,58)

## புலிகளின்...

ஆராயவுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. அரசாங்கம் முன் வைத்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த யோசனை களை தீவிரமாக ஆராய்ந்து வரும் விடுதலைப் புலிகள் இவ் வகைத் திட்டத்தில் இடம் பெறவேண்டிய புதிய யோசனைகளையும் மாற்றுத் திட்டத்தினையும் அரசிற்குச் சமர்ப் பிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. இந் நிலையில் இடைக்கால நிர் வாக கட்டமைப்பு நகல் திட்டத்தில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து ஐரோப்பாவில் கூடவுள்ள குழு தீவிரமாகப் பரிசீலிக்கும் என தெரியவருகின்றது.விடுதலைப் புலி களின் சட்ட நிபுணர்கள் குழுக் கூட்டம் ஒரு வாரகாலம் வரை நீடிக்கலாம் எனத் தெரியவருகிறது. இதேவேளை விடுதலைப் புலிகளின் இவ்வாலோசனைக் கூட்டம் பெரும் பாலும் பிரான்சின் தலைநகர் பாரி சில் நடைபெறலாம் என எதிர் பார்க்கப்படுகின்றது. (ந)

## தூதுவர்...

படிக்கைக்கு முன்னரே தமது முகாம் அமைக்கப்பட்டதால் அதனை அகற்ற முடியாதென்று விடுதலைப் புலிகள் கண்காணிப்புக் குழுவின ருக்கு அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் முகாம் தொடர் பாக எழுந்த சர்ச்சைக்கு முடிவு காண, நோர்வே அரசை நடவடிக்கை எடுக்குமாறு கண்காணிப்புக் குழு கோரிக்கை விடுத்திருந்தது.

இக் கோரிக்கையின் அடிப்படை யிலும் சமாதான முயற்சிகளில் ஏற் பட்டிருக்கும் தேக்க நிலையை போக்கும் முகமாகவே எரிக் சோல் ஹெய்ம் இலங்கைக்கு வருகிறார்.(இ)

## அமெரிக்கா...

புலிகள் சமர்ப்பித்த கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் தொடர்பான வரைபடத்தில குரங்குபாஞ்சான் உள்ளடக்கப்பட்டதாகவும் புலிகளின் வித்துடல்கள் அப்பகுதி யில புதைக்கப்பட்டிருப்பதாகவும் தெரி விக்கும் புலிகளின் தரப்பு போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழு ஒரு தலைப்பட் சமாக மேற்கொண்ட முடிவினை ஆதா ரமாகக் கொண்டு அமெரிக்காவும் புலிகள் மீது குற்றம் சுமத்தி அறிக்கை வெளியிட்டுள்ளமை குறித்து கவலை வெளியிட்டுள்ளனர். (ந)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜ யோகம் நிலையத்தின் ஏற்பாட்டில் வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்க ளிப்பு எனும் தலைப்பிலான மாதா ந்த துறைசார் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ்.வேம்படி உயர்தர பாடசாலை யில் இடம்பெறவுள்ளது.

திருமதி பகீரதி கணேசதுரை தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலிக்கிளை முகாமையாளர் இ.இராஜமகேந் திரசிங்கம், விரிவுரையாளர் திருமதி சி.தேவரஞ்சினி, தியான ஆசிரியை பிரம்ம குமாரி கௌரி ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ)

## விபத்தில் படுகாயம்

(நெல்லியடி)

பருத்தித்துறையில் இருந்து யாழ் நோக்கி சென்று கொண்டிருந்த 750 ஆவது இலக்க சிற்றூர்தி ஒன்றும் எதிரே வந்த மோட்டார் சைக்கி ளும் மோதியதில் மோட்டார் சைக் கிளில் பயணம் செய்த நபர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினார்.

யாழ்.பருத்தித்துறை வீதியில் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் நேற்று பி.ப 1மணி யளவில் இடம்பெற்ற மேற்படி சம்ப வத்தில் ஆவரங்காலை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை யான எம்.மோகன் (வயது-29) என் பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஓட்டிவந்த மோட்டார் சைக்கிளும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியது. (உ-44)

## சிறை வைக்கப்பட்டிருந்த பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் மோதல்

(கொழும்பு)

கொழும்பு புதுக்கடை மஜிஸ்தி ரேட் நீதிமன்ற சிறைச்சாலையில் பாதாள உலககோஷ்டி உறுப்பினர் களிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இம் மோதலின் போது கூரிய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள தாகவும் சிறைச்சாலை அதிகாரிக ளின் சிறப்பு பாதுகாப்பு பிரிவில் இருந்த போது, இவர்களிடம் கூரிய ஆயுதங்கள் வந்தது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் விசா ரணைகளை நடத்திவருவதாகவும் தெரியவருகிறது. (த)


### பத்திரிகை விநியோகஸ்தர்கள் தேவை

சொந்தமாக, நல்ல நிலையில் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வலம்புரி அலுவல கத்திற்கு நேரில் வரவும்.

குறிப்பு: வலம்புரி அலுவலகத்தில் இருந்து 5கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்.

### MEDICAL CHECK UP
### வைத்திய பரிசோதனை

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.


இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


### மரண அறிவித்தல்



**ராமையா ஐயர் சங்கரன்**

சென்னையைப் பிறப்பிடமாகவும், சவூதி அரேபியா, ஓமான் ஆகிய நாடுகளில் பல வருடங்கள் சேவையாற்றி இளைப்பாறிய பின் தனது அன்பு மனைவி யோகாம்பிகையின் (விமலா) பிறப்பிடமாகிய யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் சிறந்த சாயி பக்தரும், சமயச் சொற்பொழிவாளருமான ராமையா ஐயர் சங்கரன் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னார் யோகாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி ராமையாஐயர் தம்பதிகளின் (சென்னை) அன்பு மகனும், காலஞ் சென்ற திரு. திருமதி சின்னத்துரை தம்பதிகளின் (யாழ்ப் பாணம்) அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் 48/3 பருத்தித்துறை வீதி, முதலாம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ். வில்லூண்டி மயா னத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இல: 48/3 பருத்தித்துறை வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
S.K.பொன்னுத்துரை
தொ.பே. 0712-243956

(7423)


### வணக்கம்

அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் ஓர் இனிய நற்செய்தி

100 நாட்களில் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதற்கு தபால் மூலம் பயிற்சி அளிக்கப்படும்

தபால் மூலம் ஆங்கிலம் கற்பது மிக சுலபம்

- நீங்கள் தொழில் புரிந்த வண்ணமோ...
- வீட்டில் இருந்த வண்ணமோ...
- அல்லது கல்வி கற்ற வண்ணமோ...

Spoken English பாடநெறியை கற்று பெறுமதிமிக்க Diploma in English சான்றிதழ் ஒன்றை பெறலாம்.

இது உங்கள் எதிர் கால தொழில் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும்.

பாடநெறியை தொடர விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பின்வருவன

இலவசமாக வழங்கப்படும்



Spoken English (ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகம்)
Laminated File Cover
Student Identity Card
Spoken Sinhala Course
Introduction to Computer
(கணனி இயக்குவது பற்றிய அறிவுறுத்தல்கள்)

பாடநெறிக் கட்டணம் மீள் செலுத்தப்படும்

பாடநெறியைத் தொடர்ந்த மாணவரொருவர் பாடநெறி பயனற்றதென முறையிட்டால் பாடநெறிக்கட்டணம் எவ்வித கழிவுகளுமின்றி மீள் செலுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பெயர் முகவரி எழுதிய நீள கடிதவுறையை அனுப்பவும்

SUNWAY EDUCATIONAL INSTITUTE
# 120, VAUXHALL STREET
COLOMBO 02. 0777-218034

(C/6556)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.